

உ
சிவமயம்

பாவநாசத் தலபுராணம்

வசனச் சுருக்கம்

சேத்தூர், சமஸ்தான வித்துவான்
ஸ்ரீ மு. ரா. அருணசலக்கவிராயர்
இயற்றியது

பாவநாச சுவாமி தேவஸ்தானம்
தர்மகர்த்தா
ஸ்ரீ K. A. சிவஞானம் பிள்ளை அவர்களால்
வெளியிடப்பட்டது
1941

முன்னுரை

தமிழ் நாட்டில் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே சிறந்த தலமான பாவநாசத்தலம் பொதிகை மலைச்சாரலில் உள்ளது. அதன் தலபுராணம் முக்களாலிங்க முனிவரால் பாடப் பெற்றது; அதற்கு மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான் மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள் வசனம் எழுதி செய்யுளையும், வசனத்தையும் 40 ஆண்டுகளுக்கு முன் அச்சில் பதிப்பித்தார்கள்.

இப்பால் வசனச் சுருக்கத்தை மாத்திரம் அன்பர்கள் படித்து உய்யும் பொருட்டு பிரசுரம் செய்யப் பட்டிருக்கிறது.

பாவநாச சுவாமி
தேவஸ்தானம்
சித்திரை விசு தினம்
13—4—'41

K. A. சிவஞானம் பிள்ளை
தருமகர்த்தா

S. ஜேகதீச ஐயர்
மானேஜர்

பாவநாசத் தலபுராணம்

வசனச் சுருக்கம்

பொருளடக்கம்

எண்	விஷயம்		பக்கம்
1	சிபருப்பதச் சருக்கம்	...	1
2	விராட்டுச் சருக்கம்	...	3
3	கயிலாயச் சருக்கம்	...	5
4	சிவதல விசிட்டச் சருக்கம்	...	7
5	முக்களாச் சருக்கம்	...	8
6	பொதியச் சருக்கம்	...	9
7	நாரதச் சருக்கம்	...	10
8	சிவபூசைச் சருக்கம்	...	11
9	விநாயகன் றோன்றிய சருக்கம்	...	17
10	தேவி தோன்றிய சருக்கம்	...	19
11	தத்துவவுபதேசச் சருக்கம்	...	21
12	வரைகள் வரமபெற்ற சருக்கம்	...	25
13	சந்திரபாண்டியச் சருக்கம்	...	26
14	நாட்டுச் சருக்கம்	...	28
15	நகரச் சருககம்	...	29
16	விக்கிரமசிங்க பாண்டியச் சருக்கம்	...	31
17	கருணாகர பாண்டியச் சருக்கம்	...	32
18	இந்திரத்துய்மினன் திக்குவிசயச் சருக்கம்	...	34
19	இந்திரத்துய்மினன சாபமெய்திய சருக்கம்	...	41
20	இந்திரத்துய்மினன் சாபமோசனச் சருக்கம்	...	43
21	பஞ்சக்குரோசத் தெல்லையுரைத்த சருக்கம்	...	45
22	தக்கன் வேள்வி சிதைத்த சருக்கம்	...	50

23	பார்வதி திருவவதாரச் சருக்கம்	... 53
24	சிவன் யோகச் சருக்கம்	... 55
25	பார்வதி தவஞ்செய்த சருக்கம்	... 57
26	பார்வதி திருக்கலியாணச் சருக்கம்	... 59
27	அகத்தியர் வரவுரைத்த சருக்கம்	... 61
28	திருமணக் கோலக் காட்சி தந்த சருக்கம்	... 65
29	தாமிரபன்னிச் சருக்கம்	... 66
30	சுந்தரன் பாவ மோசனச் சருக்கம்	... 68
31	வணிகன் பாவ மோசனச் சருக்கம்	... 71
32	திருவாதிரை விரதச் சருக்கம்	... 75
33	சோமவார விரதச் சருக்கம்	... 78
34	சுக்கிரவார விரதச் சருக்கம்	... 81
35	புராண மகிமைச் சருக்கம்	... 85

சிவமயம்

பாவநாசத் தலபுராணம்

விநாயகர் வணக்கம்.

ஓதளப[1]புண் டரிக வெள்ளை [2]ஓதிமம்என் றுவிருந்து
செழிப்பச் செய்யுரு
[3]சாதனத்தி லெடுதத்துரைக்குந் தந்திமுக னெனவொருபேர்
தரித்த தல்லாற்
பூதலத்து மானளித்த பூங்குழை[4]காங் கேயன்மணம்
புணரும் வணணம்
காதலிப்ப வனத்துமுற்றுங் களிற்றுருவம் படைதத்துவந்த
கருணை வாழ்வே

[1. புணடரிகம=தாமரை; 2. ஓதிமம=அன்னம் (இங்கே சரசுவதியைக் குறிககும்); 3. சாதனம=உதவி; 4. காஙகேயன்=கஙகையின புத்திரனன முருகன்.]

---

1. சீபருப்பதச் சருக்கம்

வாசனை நிறைந்த மலர்களெங்கும் வண்டுகளிசை பாடுகின்ற பூஞ்சோலை வளங்களும், பிற வளங்களு மிகுந்த சீபருப்பதமென்னும் மலையின் கண்ணே எழுந் தருளிய சிவலிங்கப் பெருமானைச் சிவராத்திரியிற் பூசனை புரிந்து தெரிசனஞ் செய்வது விசேடமென்று,

சனகாதிய முனிவரெல்லாரும் வந்தார்கள். அங்ஙனம் வந்து சிவராத்திரி நான்கு சாமமுஞ் சிவலிங்கப்பெருமானை ஆராதித்துத தரிசித்த பின்பு, பதினெண் புராணங்களையும், அருளிச்செய்த வேதவியாச முனிவரைப் பார்த்து, "சுவாமி! நீர் முன்பு அருளிச்செய்த சிவ புராணங்களில சில விஷயம் இன்னும் கேட்கவேண்டும்; அவை யாவையெனில், சருவ வியாபகரான சிவபெருமான் எட்டுவித மூர்த்தங் கொண்டருளினர்; அப்பாலும் பலபல சுயம்புலிங்க வடிவமாகியும் எழுந்தருளி யிருந்தனர். இவ்விலிங்கங்கட்கெல்லாம் மூலமாகிய இலிங்கமும், அது தோன்றிய வரலாறும், அந்த இலிங்கத்தை வழிபாடு செய்யுங் கிரமமும், அங்ஙனஞ் செயதால் வரும் பிரயோஜனமும், உயர்ந்தோரால் இச்சிக்கும் தலமும், அறிந்து செய்த பாவத்தையும் அறியாது செய்த பாவத்தையும் நீக்கும் பிராயச்சித்தமும், பிறவிநோயை நீக்கும் மருந்தாகிய விரதமும் யாதொரு சந்தேகமுமறக் கட்டளையிட் டருளுக" என்று பிரார்த்தித்தனர். உடனே வேதவியாச முனிவர் தமது மாணாக்கராகிய சூத முனிவரை நோக்கி, இவையனைத்தையுந் தெரிந்து சொல்வாயெனக் கட்டளையிட்டுத் தமதிடத்துக்குச் சென்றனர். பின்பு சூத முனிவர், சனகாதி முனிவரை நோக்கிச் சொல்லுகின்றார். மகாமேருமலைக்குத் தெக்ஷிண திக்கின் கணுள்ள செநதமிழ் நாட்டிலே சந்தனச்சயிலமென்னும் பொதியமலையின் சாரலிற்றோன்றிய தாமிரபருணி

நதியினது மேல்கரையிற் றோன்றிய பாவநாசப் பெயரி லிங்கம் உலகத்திலுள்ள சுயம்புலிங்கம் எல்லாவற்றினும் முன்னருள்ளது; அந்த இலிங்கத்தை விராட் புருடனும், நான்கு வேதங்களும், பொதிய மலையும், சைல மலையும், தருகதர மலையும் ஆதிகாலத்திலே பூசனை செய்தார்கள். ஆதலால் அந்த இலிங்கத்தை எவர் தரிசித்தாலும், அவருடைய சகல பாபங்களையும் போக்கிப் பிறவி நோயையும் அவ்விலிங்கம் நீக்கியருளும். இன்னும் இச்சித்த வரங்களையும் கொடுத்தருளும். இன்னமும் அந்த மூல இலிங்கத்தின் பெருமையை அறிந்தவாறு சொல்லுவோமென்றனர்.

---

2. விராட்டுச் சருக்கம்

பல்லாயிரங்கோடி அண்டங்களுந் தமது திருமேனி யிலுள்ள உரோமந்தோறுந் தூங்கத் தாங்காநிற்கும் விராட்டு என்பவர் சகல சராசரங்களையும் சிருட்டித்து, அளவற்றகாலங் காத்துவந்தனர். பின்பு இத்தொழி லித்தையென்று விடுத்து மோக்ஷத்தை விரும்பி, பாவ நாசத்தில் பரமேசுரனை நோக்கி யோகஞ் செய்திருந் தனர். உடனே விசுவ சொரூபங்கொண்டு பரமேசுரன் அவருக்குக் காட்சி தந்தருளத் தரிசித்துப் பரவசராகி வணங்கித் தம்முடைய கருத்தை விண்ணப்பஞ் செய்ய, "வாராய் விராட்டுவே! நீ தோன்றி இன்னமும் ஒரு தினம் ஆகவில்லை. ஆதலால் முன்போல உன்னுடைய

அதிகாரத்தில் இருப்பாய். முடிவிலே நீ விரும்பிய மோக்ஷத்தைத் தருவோம்" என்று சிவபெருமான் அருளுதலும், விராட்டு என்பவர் கேட்டு விசனமுற்று, எத்தனையோ காலங்கள் கடந்தும், இன்னும் ஒரு தினமாக வில்லையானால், எவ்வளவு காலம் மேலும இருக்கிறதோ? அடியேனுடைய காலத்தின் அளவையைக் கட்டளையிட்டருள வேண்டுமென்று பிரார்த்திக்கச், சிவபெருமான் அருளிச் செய்வார், "ஒரு சதுரயுகம் இரண்டாயிர மானால், பிரமனுக்கு ஒரு நாளாகும். அந்த நாள் மூந்நூற்றறுபது ஒரு வருடம். அங்ஙனமாகிய வருடம் நூறு சென்றால, அந்தப் பிரமனுடைய ஆயுள் முடிவாகும். இங்ஙனம் இரண்டு பிரமா இறந்தால், விஷ்ணுவுக்கு ஒரு தினம் ஆகும். அப்படி ஒரு நாள் முன்னூற்றறுபது கொண்டது ஒரு வருடம. இந்த வருடம் ஆயிரமானால், விஷ்ணு ஆயுள் முடியும். இங்ஙனம் விஷ்ணு இருவரிறந்தால், உருத்திரனுக்கு ஒரு நாளாம். இந்த நாள் முந்நூற்றறுபது கொண்டது ஒரு வருடம். இவ்வருடம் நூறாயிரமானல், உருத்திரன் ஆயுள் முடிவாகும். இங்ஙனம் உருதகிரர் இருவர் இறந்தால் உனக்கு ஒரு நாளாம். இந்த நாளால் ஆகிய வருடம் கோடி ஆனல், உனக்கு ஆயுள் முடியும்" என்றனர். அது கேட்ட விராட்டுச் சுவாமி! உம்முடைய திருவருளிதுவானல் அடியேன் உம்மைப் பூசனை செய்தற்கேற்ற திருவுருக்கொள்ள வேண்டுமென்று பிரார்த்திக்க

உடனே சிவபெருமான் விசுவ சொரூபத்தை மறைத்துப் பிரகாசிக்கின்ற ஞானமயமாகிய சிவலிங்கமூர்த்தம் கொண்டெழுந்தருளி யிருந்தனர். பின்பு விராட்டு மோக்ஷத்தைத் தரத்தக்க சிவபூஜை செய்தனர். அப் பூசனையை மகிழ்ந்து பரமேசுரன் பிரசன்னராய் விராட்டுவே! நீ பூசைசெய்த இந்தத்தினம் சிவராத்திரி யாதலால் இம்முறை எம்மைப் பூசிப்பவர்கள் மோக்ஷத்தை யடைவார்கள். இந்த இலிங்கமும், நீ பூசித்தலால் வயிராசலிங்கம் எனப் பெயர் பெறும். இத் தலமும் வயிராச தலமென விளங்கும் என்றருளிச் செய்து இலிங்கத்தினுள் மறைந்திருந்தார்.

---

3. கயிலாயச் சருக்கம்

திருக்கயிலாச மலையின் கண்ணே சீகண்டனென்னும் பெயரையுடைய வித்தியேசுரன் மோக்ஷத்தை விரும்பி அநேகநாள் அருந்தவஞ் செய்துகொண்டிருந்தான். அது தெரிந்த சிவபெருமான் அவனுக்கெதிரே சிவலிங்க மூர்த்தமாக எழுந்தருளியிருந்தார். அவ் வித்தியேசுரன் கண்கள் குளிரத் தரிசித்து மனமுருகிப் பூசனை புரிந்து தோத்திரம் புகன்றான், பின்பு பரமேசுரன் கரசரணாதி யவயவந் தோன்ற எதிரே யெழுந்து வேண்டும் வரங் கொடுத்தருளி அந்த ஞான இலிங்கத்துள்ளே மறைந்திருந்தனர். அன்று தொட்டு அவ்விலிங்கம் ஞானசீகண்ட இலிங்கமெனப் பெயர்

பெற்றது. அதுகண்டு யாவரும் பூசனை செய்துவந்தார்கள். அவ்விலிங்கத்துளமர்ந்திருக்கின்ற பரமேசுரனுடைய ஞான சத்தியினது திருநாமம் இலளிதை; அவளுக்கு ஏவல் செய்பவராய், இச்சாசத்தியும், கிரியா சத்தியுமிருந்தது கண்டு மனமகிழ்ந்து உங்களுக்குவேண்டும் வரங்களைக் கேளுங்களென்று அந்த இலளிதையாகிய ஞானசத்தி வினவலும், அவ்விருவரும் நீ மரகத நிறமுடைய நாரணனாகி எங்களைக் கலந்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க அதற்கிசைந்து, நாரணனாகவும் சிவபெருமானைப் பிரியாதிருக்க நாரணியாகவும், இலளிதை இவ்விரண்டு திருவுருவங் கொண்டனளாய் அவ்விரு மாதரையுந் தழுவிப் பிரியாதிருக்குங் காலத்து ஒருநாள் சிவபெருமான் புனல் விளையாடல் செய்யுந் திருவுள்ளக் குறிப்பைத் தெரிந்த சரசுவதியானவள் தனது ஒரு கலையினாலே நதியுருவமானாள். அந்நதியினுள்ளே நாரணியாகிய தன் சத்தியுடனே நீர் விளையாடல் செய்தருளிப் பின்பு தன் சத்தியை நோக்கி நாரணியே! உனது கொங்கைகளிற் கலந்த குங்குமந் தோய்ந்து தாமிரை நிறம் படைத்தலால் இந்நதி தாமிரை பன்னிமா நதியாகுமென்று சொல்லியருளி மீண்டு பீதாம்பரமும் நவமணிப் பணிகளும் புனைந்து சிம்மாதனத்தில் வீற்றிருந்தனர்.

பெற்றது. அதுகண்டு யாவரும் பூசனை செய்துவந்தார்கள். அவ்விலிங்கத்துளமர்ந்திருக்கின்ற பரமேசுரனுடைய ஞான சத்தியினது திருநாமம் இலளிதை; அவளுக்கு ஏவல் செய்பவராய், இச்சாசத்தியும், கிரியாசத்தியுமிருந்தது கண்டு மனமகிழ்ந்து உங்களுக்குவேண்டும் வரங்களைக் கேளுங்களென்று அந்த இலளிதையாகிய ஞானசத்தி வினவலும், அவ்விருவரும் நீ மரகதநிறமுடைய நாரணனாகி எங்களைக் கலந்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க அதற்கிசைந்து, நாரணனாகவும் சிவபெருமானைப் பிரியாதிருக்க நாரணியாகவும், இலளிதை இவ்விரண்டு திருவுருவங் கொண்டனளாய் அவ்விரு மாதரையுந் தழுவிப் பிரியாதிருக்குங் காலத்து ஒருநாள் சிவபெருமான் புனல் விளையாடல் செய்புந் திருவுள்ளக் குறிப்பைத் தெரிந்த சரசுவதியானவள் தனது ஒரு கலையினாலே நதியுருவமானாள். அந்நதியினுள்ளே நாரணியாகிய தன் சத்தியுடனே நீர் விளையாடல் செய்தருளிப் பின்பு தன் சத்தியை நோக்கி நாரணியே! உனது கொங்கைகளிற் கலந்த குங்குமந் தோய்ந்து தாமிரை நிறம் படைத்தலால் இந்நதி தாமிரைபன்னிமா நதியாகுமென்று சொல்லியருளி மீண்டு பீதாம்பரமும் நவமணிப் பணிகளும் புனைந்து சிம்மாதனத்தில் வீற்றிருந்தனர்.

---

4. சிவதலவிசிட்டச் சருக்கம்

மேற்கூறியவாறு வீற்றிருந்தருளிய சிவபெருமான் திருமுன்னர் நந்திதேவரருள் பெற்று விராட்டு என்பவர் சென்று தரிசித்து ஆனந்த வெள்ளத்தின் மூழ்கி எம் பெருமானே! நீர் விசேடமாக எழுந்தருளியிருக்கும் சிவ க்ஷேத்ததிரத்தை யருளிச்செய்யவேண்டு மென்று விண்ணப்பஞ் செய்யச் சிவபெருமான் அவரை நோக்கிச் சொல்லுவார். நாம் சிவலிங்க வடிவமாகி யிருக்கும் விருத்தாசல முதலாகச் சொல்லப்பட்ட திவ்ய க்ஷேத்திரங்கள் பலவுள. அவற்றுள் சிதம்பரத்தில் ஆகாய லிங்கம், சீகாளத்தியில் வாயுலிங்கம், திருவண்ணாமலை யில அக்கினிலிங்கம, திருவானைக்காவில் அப்புலிங்கம், திருவாரூரில் பிருதிவிலிங்கம் ஆக விளங்குவோம். பொதியமலைச் சாரலிலுள்ள பாவநாசத் தலத்திலே பரஞ்சோதி லிங்கமாக விளங்குகின்றனம். மேலே சொல்லிய ஐந்து ஸ்தலங்களுக்குள்ளே பிறந்தால் முத்தி கொடுப்பது ஒரு தலம். இறந்தால் முத்தி தருவது ஒரு தலம். தெரிசித்தால் முத்தி அருளுவது ஒரு தலம். இந்த மூன்றாலும் மோக்ஷம் கொடுப்பதாகிய பாவநாசத் தலம் மிக மேலாயுள்ளது என்று சிவபிரான்றிருவாய் மலர்ந்தருளக் கேட்டுச் சந்தோஷித்து, தேவரீர் அத் தலத்திலுள்ள பரஞ்சோதி லிங்கத்தில் எக்காலமும் நீங்காது எழுந்தருளியிருக்க வேண்டுமென்று விராட்டு

வானவர் பிரார்த்திக்க அவ்வாறெழுந்தருளி யிருக்கின்றேமென்று சிவபெருமானருளிச் செய்தலும் அவ்வரம் பெற்று மீண்டு விராட்டு தம்மிடத்துக்குச் சென்றார்.

---

5. முக்களாச் சருக்கம்

சருவ வியாபகராகிய பரமேசுரனைவர் சகல அண்டங்களையுஞ் சிருஷ்டி செய்து காக்கும் விராட்டு என்பவருக்காகப் பாவநாசத் தலத்தில் வயிராச இலிங்கமாகத் திருவுருக் கொண்டெழுந்தருளி யிருந்ததை நான்கு வேதங்களுந் தெரிந்துகொண்டன. அவற்றுள் அதர்வண வேதமானது ஆகாய ரூபங்கொண்டு அந்த வயிராச லிங்கத்தை வணங்கித் தோத்திரஞ் செய்தது. மற்றை மூன்று வேதங்களும் மூன்று களா விருக்ஷங்களாகி அநேக விரதாதிகளைச் செய்து வயிராசலிங்க மூர்த்தி திருமேனியில் வெயில் படாதவிதம் நீழல் செய்து தேனையும், மலரையும் அபிடேகமாகவும், அருச்சனையாகவுஞ் சொரிந்து, மதுரமான கனிகளைச் சொரிந்து நைவேத்தியஞ்செய்து பூசித்துக்கொண்டிருக்கின்றன. ஆதலால் அந்த வயிராசலிங்கத்துக்குப் பழமறை நாயகனென்றும் முக்களா மூர்த்தியென்றும் உயர்ந்தோர் திருநாமஞ் சொல்லுவர். இவ்விலிங்கம் பூசித்தோர் தீவினைக் கட்டறுத்து வேண்டிய வரங்களைத் தந்தருளும்.

---

6. பொதியச் சருக்கம்

மெய்ஞ்ஞானம் பெற்ற துறவிகள் அடைதற்கெளிய தாகி மற்றவர்கள் அடைதற்கரியதாகி இயல் இசை நாடகம என்னும் முத்தமிழும், பெருமைதங்கிய தாம்பிர பருணி நதியும், தென்றற் காற்றும் தன்னிடத்திலுடைய தாகிச் சகல வளங்களும் நிறைந்துள்ளதாகிக் கனி, காய், கிழங்கு, சருகு முதலியவற்றைப் புசித்தும் இவை யொன்றையும் புசியாதும் பரமேசுரனை இருதய தாமரை மலரிலிருத்தித் தவஞ் செய்யும் முனிவர்களுக்கு அத் தவத்தின் பிரயோஜனத்தை எளிதிலே தருவதாகியுள்ள பொதியமலையானது முன்னொரு கற்ப காலத்திலே இரண்டு பக்கமும் சைய மலையும் தருத்ர மலையும் தனக் குத் தோழராயிருப்ப மற்றநேக மலைகள் தன்னைச் சூழ்ந்து நிற்ப நவரத்தின கிரீடம் புனைந்து சிங்காதனத் தில் அரசிருந்தது. அந்தச் சமயம் முனி சிரேஷ்ட ராகிய நாரதமா முனிவர் எதிரெழுந்தருளுதலும் உடனே அவரை எதிர்கொண்டு வணங்கிச் சந்திரகாந்தத் தாலாகிய ஆசனத்திலிருக்கச் செய்து தேவரீர் இங் கெழுந்தருளிய விசேடம் யாது எனப் பொதியமலை கேட்ப, அம்முனிவர் பொதியமலை, சையமலை, தருத்தர மலையாகிய மூன்று மலைகளுக்கும் சொல்லுவாராயினர்.

---

7. நாரதச் சருக்கம்

பொன்னுலகத்திலே கற்பக விருக்ஷங்கள் புட்ப மாரி பொழிய முனிவர் அநேகர் தோத்திரஞ்சொல்லத் தேவப்பெண்கள் இரண்டு பக்கமுஞ் சாமரைகள் வீசச் சந்திரவட்டக்குடை நீழல் செய்ய உருப்பசி முதலிய பெண்கள் நடனமாட இந்திராணியுடன் தேவேந்திரன் இரத்தின சிம்மாதனத்திலே கொலுவீற்றிருந்தான். அந்தச் சமயம் யாழ் வாசித்தலிலே சிறந்தவர்களாகிய கோசரர் வந்து பரம கருணாநிதியாகிய சிவபெருமா னுடைய திருவடிகளைத் தோத்திரஞ் செய்து கயிலாச மலையையும் மகாமேரு மலையையும் இன்னுஞ் சில மலை களையும் புகழ்ந்து பாடினர். அதுகேட்ட இந்திரன் சந்தோஷமுற்று அவர்களுக்கு வேண்டியவைகளைக் கொடுதததனுப்பிவிட்டுத் தன்னுடைய குருவாகிய வியாழ பகவானை நோக்கி, இந்த வித்துவான்கள் சில மலைகளை மாத்திரம் புகழ்ந்து பாடியது யாது காரணமென்று கேட்கத் தேவகுருவானவர் சொல்லுவார். பரமசிவனைப் பூசித்து பேர்பெற்ற மலைகளைத்தாணிவர் புகழ்ந்து பாடினார். இமயமலையும் பொதியமலையும் இன்னுஞ் சில மலைகளையும் பரமேஸ்வரனைப் பூசியாதிருந்தமையால் அவைகளைப் புகழவில்லையென்றனர். இந்த வார்த்தையை இமயமலைக்குச் சொல்லிச் சத்திமந்திரத்துடன் சிவ மூலமந்திரத்தையுமுபதேசித்து இங்கு வந்தேனென்று நாரதமுனிவர் சொல்லக்கேட்ட பொதியம் - சையம்

தருத்தரம் எனப்படும மூன்று மலைகளும், உடனே வணங்கித் துதிப்ப நாரதர் தமது கமண்டலத்திலிருந்த நீரை அம்மலைகள் மேலே புரோக்ஷித்தார். அந்த நீர் நாரத தீர்த்தமானது. அதைத் தொட்டாலும் புண்ணியத்தை விளைவிக்கும் என்று பின்பு இமயமலைக்கு உபதேசஞ் செய்த மந்திரங்களை உபதேசித்துச் சிவ பூசாவிதி முறையையும் போதித்து இந்த இடத்துக்குக் கீழ்த்திசையிலுள்ள முக்காளா விருக்ஷத்தின் முற்றத்திலே எழுந்தருளிய சிவலிங்கப்பெருமானைப் பூசை செய்யுங்கள். அந்தக் களா விருக்ஷத்துக்கு ஈசான திக்கிலே மூன்று வேதங்களும் மூன்று தீர்த்தங்களாயிருக்கின்றன என்று கூறித் தமதிடத்துக்குச் சென்றனர். பின்பு மலைகள் மூன்றும் எழுந்து சென்று வேத தீர்த்தங்களிலே ஸ்நானஞ் செய்து நாரதர் கட்டளைப்படியே சிவார்ச்சனை செய்யத் தொடங்கின.

---

8. சிவபூசைச் சருக்கம்

நாரத முனிவரானவர் பொதியமலை, சையமலை, தருத்தரமலை எனப்படும் மூன்று மலைகளுங் கேட்கச் சிவபூசை விதிமுறைச் சிவாகமத்திலருளிச் செய்யப்பட்டபடியே சொல்லிய சிறப்புத் தங்கிய கதையைச் சனகாதி முனிவருக்குச் சூதமுனிவர் சொல்லுவாராயினர். பரிசுத்தமாகிய நதிக்கரையிலாவது, மலையிலாவது வில்வப் பூங்காவனத்திலாவது, சிவாலயத்திலாவது,

குற்றமில்லாத கிரகத்திலாவது, விதிப்படி பூசா மண்டபஞ் செய்வித்து, விசேடமான நதியிலே ஸ்நானம் பண்ணிச் சுத்த வஸ்திர மிரண்டு தரித்து விபூதி ருத்திராக்ஷமணிந்துகொண்டு பூசா மண்டபத்தை யடைந்து முக்குற்றத்தையும் நீக்கி வடக்கு நோக்கிப் பத்மாசனமாக இருந்து ஐம்புலன்களையு மொடுக்கி, மனத்தைப் பரிசுத்தப்படுத்திப் புண்ணியாகத்தாற் பூசா மண்டபத்தைச் சுத்தி செய்து விநாயகக் கடவுளாகிய துவார பூசைமுடித்து, அப்பால் நிலம், சலம் முதலாகிய பூத சுத்தியை முறைப்படி செய்து பின்பு மானதபூசை செய்யத் தொடங்கி மனமாகிய தாமரைப் பூவிலே நிலம் ஆதி விந்து இறுதியாகச் சொல்லப்பட்ட ஆசனங் கற்பித்து, அதன்மேல் வெண்ணிறமாகிய ஞான லிங்கத்தை யெட்டு விரலுயரமாகப் பாவித்து எழுந் தருளப்பண்ணிப் பின்பு பொறுமையை அருக்கியம் பாத்தியம ஆசமனமாகவும், ஞானம் சலமாகவும், புத்தி சந்தனமாகவும், பாவனைகள் புட்பங்களாகவும், ஆங்காரம் தூபமாகவும், மானம் தீபமாகவும், மந்திரம் சுழுமுனை நாடியாகவும், நைவேத்தியம விந்துவி லுள்ள அமுதாகவும் அமைத்துக்கொண்டு மேலே யெட்டு விரலுயரமாக அமைக்கப்பட்ட இலிங்கத்திலே துவாதசாந்தத்திலே யுள்ள சோதியை ஆவாகனஞ் செய்து உபதேச முறைப்படி பூசை முடித்தல் வேண்டும். இந்தப்படி மானத பூசை முடித்த பின்பு,

புறத்திலே பூசை செய்யத் தொடங்கித் தானசுத்தி செய்து பாத்தியமாதி தாபித்துச் சந்தன முதலிய பூசா திரவிய சுத்தியும், மந்திரசுத்தியும், சிவலிங்க சுத்தியுஞ் செய்து மணிகளிழைதத பொன்னலாகிய பீடத்திலே சிவலிங்கத்தை யெழுந்தருளுவித்து, அனந்தாசனங் கற்பித்து அக்கினிதிசை முதலிய நான்கு திசையிலும் தன்மம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம் எனப்படும் நான்கு காலகளையும் கீழைததிசை முதலிய நான்கு திசையிலும் அதன்மம், அஞ்ஞானம், அவைராக்கியம், அனைசுவரியம் எனப்படும் நான்கு சட்டங்களையுஞ் சேர்த்து, பிருதிவியாகிய கிழங்கினின்றுந் தோன்றிய அசுத்த மாயையாகிய கீழிலேயும் சுத்த மாயையாகிய மேலிலேயும் அட்டவித்தியேசுராகிய எட்டு இதழும், இதழைச் சூழ்ந்த இடஞ் சூரியமண்டலமாகவும், இதழினுள ளிருக்கின்ற மகரந்தஞ் சந்திரமண்டலமாகவும், மகரந்தம் பொதிந்த கன்னிகை அக்கினி மண்டலமாகவும், கன்னிகையினது நடு இடம் சததி மண்டலமாகவும் உள்ள பதுமா சனத்தைப் பீடததிலெழுந்தருளிய சிவலிங்கத்துக்குச் சாத்திச் சிவமூர்ததம் ஆவாகனஞ் செய்து, அதனபின்பு வெண்ணிறமுள்ள ஈசான முகமும், பொன்னிறமுள்ள தற்புருட முகமும், கறுப்பு நிறமுள்ள அகோரமுகமும் சிவப்பு நிறமுள்ள வாமமுகமும், வெண்ணிறமுள்ள சததியோசாதமுகமும் சூலம், வேல், மழு, வச்சிரம் ஆகிய இவ்வைந்தையுந் தரித்த வலப்பக்கத்துத்

திருக்கரங்கள் ஐந்தும், மாதுளங்கனி, பாசம், சர்ப்பம், ருத்திராக்ஷம், உடுக்கு ஆகிய இவ்வைந்தையுந் தரித்த இடப் பக்கத்துத் திருக்கரங்கள் ஐந்தும், இன்னும் மற்றையவயவங்களும, சந்திரனைத் தரித்த சடையும், சர்ப்பமாகிய முப்புரிநூலும், பதுமாசனமும உடைய வித்தியாதேகததை ஆவாகித்து, அதன்மேல் சிவத்தை ஆவாகனஞ் செய்து வஸ்திரம், கிரீடம், மாலை, சந்தன முதலியவணிந்து இலயாங்க பூசையை விதிப்படி முடிக்க வேண்டும்.

அதன்மேல் திரிநேத்திரமும், சந்திர சடாமகுடமும், படிக நிறமும், முத்தலைச் சூலமும் அபயமுந் தாங்கிய இரண்டு கைகளையுமுடைய ஈசானமுகத்தை ஈசான திசையிலும், பொன்னிறமும், மூந்நூலும், திரிநேத்திரமும், பீதாம்பரமும், சந்திரசடாமகுடமும், மாதுளம்பழமும், உருத்திராக்ஷமாலையும் தாங்கிய இரண்டு காங்களுமுள்ள தற்புருடமுகத்தைக் கீழ்த் திசையிலும், சந்திரசேகரம் திரிநேத்திரம், குண்டலம், கபாலம், தேன்மாலை, சர்ப்பமாலை, நெறித்தபுருவம், கரு நிறம், விகிர்தமுகம், பாசம், கட்டுவாங்கம், கேடகம், வெண்டலை மாலை, சூலம், மழு, வாள், தண்டம், வக்கிர தந்தம், சாந்தம் இவைகளைத் தாங்கிய அங்கத்தோடுள்ள அகோரமுகத்தைத் தென் திசையிலும், சிவந்த வஸ்திரமும், சிவந்த மாலையும், சிவந்த தலைப்பாகையும், உயர்ந்த மூக்கும், முப்புரிநூலும், கேடகம், வாள் தாங்கிய

கரங்களும் உள்ள வாமதேவமுகத்தை வட திசையிலும், திரிநேத்திரமும், சந்திரசடா மகுடமும், சாந்தமும், வெள்ளைத் தலைப்பாகையும், வரதமும், அபயமும், வெள்ளை வஸ்திரமும், வெண்ணிறமும், வெண்மாலையும் உள்ள சத்தியோசாதமுகத்தை மேலைத் திசையிலும் ஆகப் பாவனை செய்து முறைப்படி போகாங்க பூசை செய்ய வேண்டும். இன்னும் சிவந்த திருமேனியும் சூலமும், சர்ப்பமும், முத்தத்துவங்களும், சோமசூரி யாக்கினி நேத்திரங்களும், ஈசானருக்கு உள்ளனவாம். அன்றியும், வெண்ணிறமும், பொன்னிறமுள்ள இருதய மும், சிவந்த சிரமும், சிகையும், நீல நிறமுள்ள கவசமும், வரதம் வேல் அபயம் வாளிகளையுடைய கரங்களும், சந்திரசடாமகுடமும் உள்ள எல்லா மூர்த்தங்களுக்கும் அக்கினி, ஈசானன், நிருதி, வாயு ஆகிய திசைகள் நான்கு மிருப்பிடமாம். பொன்வடிவமும், சூலமும், அபயமுந்தாங்கிய கரங்களும் வக்கிர தந்தமுங் கொண்ட அகோர மூர்த்தியைக் கிழக்கு முதலாகிய நான்கு திசை யிலும் போகாங்க பூசை செய்தலுமாகும்.

அதன்மேல் ஆவரண பூசை செய்யத் தொடங்கிப் பொன்னிறமுள்ள அனந்தர், சிவப்பு நிறமுள்ளசூக்குமர், நீல நிறமுள்ள சிவோத்தமர், பவள நிறமுள்ள ஏக நேத்திரர், பால் நிறமுள்ள ஏக ருத்திரர், பனி நிறமுள்ள திரிமூர்த்தி, சிவந்த நிறமுள்ள சீகண்டர், வெண்ணிற முள்ள சிகண்டி எனப்படும் அட்டவித்தியேசுரராகிய

எண்மரும் சந்திரனைத்தரித்தமுடியும், நான்கு முகங் களும் சூலம், அம்பு, வில், கேடகம், வாள், அபயம், உருத்திராக்ஷமாலை, வரதம், கமண்டலம், அக்கினி ஆகிய இப்பத்தினையுந் தாங்கிய பத்துக் கைகளையுடையவர். இவரை இந்திர திசை முதல் ஈசான திசை வரையும் இரண்டாவது ஆவரணத்திலே பூசை செய்யவேண்டுமெ. அதன்பின்பு செம்பரததம்பூ, மேகம், முத்து, அரக்கு, பளிங்கு, பொன், பசுமை, சிவப்பு ஆகிய இந்த எட்டுப் பொருளினிறங்களைத் தனித்தனி முறையே பெற்றுப் பத்மாசனத்தைப் பொதுவாகப் பெற்ற நந்தி, மாகாளன், பிருங்கி, கணபதி, விடை, முருகன், உமை, சண்டேசன் எனப்படும் எண்மரையும் மூன்றும் ஆவரணத்திலே பூசிக்கவேண்டும். அதன்பின் எட்டுத் திசையிலும் திக்குப்பாலகராகிய இந்திரனாதி எண்மரையும், பிரமன், விஷ்ணு இவ்விருவரை ஈசான திசையிலும், நிருதி திசை யிலும் நான்காம் ஆவரணத்திலே பூசை செய்யவேண்டும். அதன்பின் குலிசம், வேல், வாளி, பாசம், துவசம், கதை, சூலம், சக்கரம் ஆகிய ஆயுதங்களை எட்டுத் திசையிலும் ஐந்தாம் ஆவரணத்திலே பூசை செய்யவேண்டும். இங்ஙனம் சோடசோபசாரத்துடன் பூசை செய்து முடித்த பின்னர் சிவனடியார்களுடன் சிவபுராண பாரா யணஞ் செய்தவர் சனனக் கடலைக்கடந்து மோக்ஷமாகிய கரையை யடைவார். இப்படிச் செய்யுஞ் சிவபூஜை யுடையவருக்குப் போகம், இந்திராதியர் பதவி, மோக்ஷம்

ஆகிய இவற்றுள் இச்சித்தவையெல்லாங் கிடைக்கும். யாகம் அட்டமாசித்தி தவம் முதலியவைகளெல்லாம் சிவபூசைக்கு நிகராகாவாம். ஆதலாலிந்தப் பூமண்டலத்திலே பிறந்து சிவபூசை செய்தவர் பெருமையை யளந்து சொல்ல வல்லவர் யாவர்? குற்றமற்ற நல்ல குலத்திற் பிறந்தவராயிருந்தாலும் சிவபூசை செய்யாதவர் மான்மிய மடையமாட்டார். தாழ்ந்த குலத்திலே யுதித்தவராலும் விதிப்படி சிவபூசை செய்வாராயின் உயர்ந்த குலத்தினராவர் என்று நாரத முனிவர் அருளிச்செய்யக் கேட்டுப் பொதியம், சையம், தருத்தரம் என்னும் மலைகள் மூன்றும் பாவநாசத்திலெழுந்தருளிய வயிராச லிங்கத்தைப் பூசித்துத் தங்கியிருந்தன வென்று சனகாதியருக்குச் சூதமுனிவர் சொல்லியருளினர்.

---

9. விநாயகன் றோன்றிய சருக்கம்.

சோதிமயமாகிய பரமேசுரனை நாடிப் பொதியம், சையம், தருத்தரம், ஆகிய மூன்று மலைகளும் போய் வேத தீர்த்தத்திலே விதிப்படி ஸ்நானஞ்செய்து விபூதி ருத்திராட்சமாகிய சிவசாதனங்களைத் தரித்து முக்களா நிழலிலெழுந்தருளிய வயிராசலிங்க மூர்த்தியைப் பூசித்து வரும் நாளிலே, ஒரு சுக்கிரவாரத்தில் விநாயக சதுர்த்தி வருதலும் நித்திய கன்மங்களை முடித்து வேத தீர்த்தக் கரையிலே வடதிசையை நோக்கிப்

பதுமாசனத்திலிருந்து மிருத்திகையினால் விநாயகக் கடவுளுடைய திருவுரு அமைத்து மந்திரவிதி முறை வழுவாமல் அருக்கிய முதலிய கொடுத்து, அருகு முதலிய புட்பங்கள் சாதநிப் பற்பலவாகிய பண்ணியங்களும், கனிகளும் பிறவும் நிவேதிப்பித்துப் பூசை செய்தன. அப்பூசையை யினிதுகொண்டருளிக் கயிலாசமலை எதிரெழுந்ததுபோல வெண்ணிற யானை முகத்தோடு விநாயகக் கடவுள் பிரசன்னராகி வேண்டிய வரங்களைக் கொடுத்தருள, மலைகள் மூன்றும் தோத்திரஞ்செய்து இந்த இடத்தில் இந்தத் திருவுருவுடனே எழுந்தருளி யிருக்க வேண்டுமென்று பிரார்த்திக்க, வெள்ளை யானை முக விநாயகர் அந்த வரங்கொடுத்தருளி மேலும் இன்னும் ஒருமாதஞ் சென்றால் மலைகளே! பிறவி தோறுஞ் செய்த உங்கள் பாவமெல்லாம் உங்கள் உரோமத் துவாரத்தின் வழியே கரிய யானை வடிவங் கொண்டு வெளியே வரும். அந்தச் சமயம் நீங்கள் பார்வதிதேவியாரைத் தியானித்தால் அத்தேவியார் எழுந்தருளி அந்தயானையைக் கொன்று உங்களுக்குச் சேமஞ் செய்தருளுவரென்று மறைந்தருளினார். பின்பு அடுத்த கன்னிமாதம் சோமவார தினத்திலே அந்தப் படியே பாவமாகிய கரியயானை வெளிப்பட்டது.

10. தேவி தோன்றிய சருக்கம்

மலைகளும், கடல்களும், ஆகாயமும், இயமனும் வடவாமுகாக்கினியும் ஆகிய எல்லாப் பொருள்களும் பயப்படும்படி ஆலகாலவிடம்போலக் கொதித்தெழுந்து ஒரு மாமரத்தைப் பிடுங்கிக்கொண்டு நீல மேருமலை போல வந்த பாவமாகிய கரிய யானையைக் கண்டு பொதியம், சையம், தருத்தரம் என்னும் மூன்று மலைகளும் நடு நடுங்கி விநாயகக் கடவுளுத்தரவுப்படி உமாதேவியாரைப் பிரார்த்தித்தலும், உடனே உமாதேவியாரெழுந்தருளத் தரிசித்து மலைகள் மூன்றும் எங்களுடைய பாவமாகிய யானையைக் கொன்றருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செயயத் திருவருள் சுரந்து உமாதேவியார் தமது திருக்கரத்திலுள்ள பாசத்தை வீசுதலும், அந்தப் பாசம் பாவமாகிய யானையைக் கட்டிக்கொண்டு வந்து நிறுத்தியது. இத்தினத்துக்கு அடுத்த தினமானது நவராத்திரி முதற்றினம ஆதலால், இந்திரன் முதலாகிய சகல தேவர்களும் வந்து வேத தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்து முக்காள நிழலிலெழுந்தருளிய வயிராசலிங்கத்தைத தரிசித்து உமாதேவியாரை ஒன்பது இராத்திரியும் பூசித்துத் தசமியிலே வந்தனஞ்செய்து தோத்திரஞ் செய்தார்கள். இதுகண்ட மலைகள் மூன்றும் இந்தப் படியே பூசை செய்து தோத்திரஞ் செய்தன. அந்தப் பூசையை யுவந்து உமாதேவியார் வன்னி விருக்ஷத்தின் நிழலில் இந்திரன் கொடுத்த சிம்மாதனத்தில்

எழுந்தருளிப் பின்பு வில் வளைத்து விஞ்ஞானமாகிய பாணத்தையும், வாகனமாகிய சிங்கத்தையும், பாசத்தாற் கட்டிவைத்த யானையைக் கொன்று வரும்படி யனுப்ப, அந்தப் பாணமும் சிங்கமுஞ்சென்று யானையைக் கொன்று கீழே விழச்செய்தன. அதுகண்ட இந்திரன் முதலானவர்களும் மலைகள் மூன்றும் உமாதேவியைத் தோத்திரஞ் செய்தார்கள். விதிப்படி இந்த நவராத்திரிப் பூசையை யாா செய்தாலும் பகையரசர்கள் வணங்க உலகமெங்கும் அரசாட்சி செய்வார்கள். இதுவல்லாமல் விஞ்ஞான பாணம் பாய்ந்த இடத்திலுண்டாகிய விஞ்ஞான தீர்த்தத்திலும் சிங்கம் பாய்ந்த இடத்தில் உண்டாகிய சிங்க தீர்த்தத்திலும் ஸ்நானஞ்செய்தவர் கள் பாவங்களெல்லாம் நீங்குவரென்று அவரவர் களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்து மூன்று மலை களையுநோக்கித் தத்துவப்பொருளை யுபதேசித்து நீங்கள் இவ்விடத்துத் தவஞ்செய்து கொண்டிருந்தால் மாசிமாத சிவராத்திரியிலே சிவபெருமான் தரிசனங்கொடுத்து உங்களைப் பாண்டியன், சோழன், சேரன் என்னும் மூன்று அரசர்களாகப் பிறக்கும் வரந்தந்தருளுவர்; அப்படிப் பிறந்து பின்பு நெடுங்காலஞ் சென்று மோக்ஷத்தை யடைவீர்களென்று திருவாய்மலர்ந்து உமாதேவியார் மறைந்தருளினர் என்று சூதமுனிவர் சொல்ல நைமிசாரணிய முனிவர்கள் வணங்கி அவ் வுமாதேவியார் வரைகள் மூன்றுக்கும் உபதேசித்த

தத்துவப் பொருளும் அவ்வரைகள் பெற்ற பெரும் பேற்றையுஞ் சொல்லவேண்டுமென்று கேட்கச் சூத முனிவர் சொல்வாராயினர்.

---

11. தத்துவவுபதேசச் சருக்கம்.

பதி, பசு, பாசம் என்று சொல்லப்படும் மூன்று பொருள்களும் அநாதியேயுள்ளன. அவற்றுள், பதி-சிவபெருமானொருவரே, பசு எண்ணிறந்த கோடியாம், ஆயினும் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூன்று வகைக்குள்ளே யடங்கி நிற்கும். பாசம் ஐந்து வகைப்பட்டு விளங்காநிற்கும். இனி, பதியாகிய சிவபெருமான் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம் அநுக்கிரகம் என்னு மிவ்வைந்து தொழில்களையுஞ் செய்யாநிற்பர். மேல் விஞ்ஞானகலரெனப்படுவார்-ஆணவ மலம் ஒன்றே யுள்ளவர்; பிரளயாகலர் எனப்படுவார்-ஆணவமும் கன்மமுமாகிய இரண்டு மலமுமுள்ளவர். சகலரெனப்படுவார் - ஆணவமும், கன்மமும், மாயையுமாகிய மூன்று மலங்களையுமுடையவர். இம்மூவகையாருள் ஆணவமல மொன்றுமுடைய விஞ்ஞானகலர்-ஆணவமலம் நீங்கினவரென்றும், அது நீங்காதவரென்றும் இருவகைப்படுவர். இவ்விருவருள் ஆணவமலம் நீங்கினவரே மோக்ஷமடைந்தவர்; அவ்வாணவமலம் நீங்காதவர்-அட்டவித்தியேசுரர். அவர் - சத்த கோடி மந்திரசொரூபியராய் நின்று பிரளாயகலதுர

பாசத்தைக் கெடுத்தருளுவர் - பிரளாயகலர் பக்குவ ரென்றும் அபக்குவரென்றும் இறுதிறத்தினராவர்; இவருள் பக்குவராவர்-பரமேசுரனாலே நயன தீக்ஷை பெற்று மேற்கூறிய இரண்டுமல சம்பந்தத்தையும் நீக்கி மோக்ஷம் அடைந்தவரே. அபக்குவராவர்-சுகனேசராதி எண்மரும், குரோதராதி எண்மரும், உருத்திரேசர் நூற்றுவரும், சீகண்டேசரும், வீரபத்திரரும் ஆகிய நூற்றுப்பதினெண்மருமே. சகலராவர் - தேவர்கள் முதல் எறும்பு இறுதியாகச் சொல்லப்பட்டவர்களாம். இவருள்ளும் பக்குவரும் அபக்குவரும் என இரண்டு பிரிவுண்டு. பக்குவர்களெல்லாந் தீக்ஷை செய்யப்பட்டு மோக்ஷத்தையடைவார்கள். அபக்குவரும் இருவினை யொப்பு வந்தவிடத்து அங்ஙனம் மோக்ஷத்தை யடைவார்கள். முன் சொல்லப்பட்ட பாசம் ஐந்தனுள் ஆணவம், மாயை, கன்மம், திரோபவம் எனப்படும் நான்கும் உயிர்களைப் பந்தப்படுத்தி நிற்கும்.

இனி, தத்துவங்கள் வருமாறு: நிருமல வியாபி யாகிய சிவபிரானருளினாலே சிவதத்துவந் தோன்றும், அதிலே சத்தி தத்துவந் தோன்றும, அதிலே சதாசிவ தத்துவந் தோன்றும், அதிலே ஈஸ்வரதத்துவந் தோன் றும், அதிலே வித்தை தததுவந்தோன்றும். இந்த ஐந்தும் சுத்ததத்துவமென்று பெயர் பெறும். இதுபோலவே சுத்தாசுத்த தத்துவமும் ஐந்தாம். அவையாவன :- நியதி, காலம், கலை, வித்தை, அராகம் என்பனவாம்.

இவ்வைந்தனுள் காலமும், நியதியும், கலையும், மாயையினின்றுந் தோன்றும். கலையினின்று வித்தையும், வித்தையினின்று அராகமுந் தோன்றும். இவைகளுள் காலம்-இறப்பு, எதிர்வு, நிகழ்வு என மூவகைப்படும். இந்தச் சுத்தாசுத்த தத்துவம ஐந்தையுஞ் சேர்ந்து ஆன்மாக்கள் அளவில்லாத போகத்தை யநுபவிக்கும் போது புருட தத்துவந் தோன்றும். (அதாவது ஒரு மலம்) அப்பெயர் ஆன்மாவையே யடையும்; அதனோடு மாயையுங் கூட்டச் சுததாசுத்த தத்துவங்கள் ஏழு வகைப்படும். இனி அசுத்த ததததுவந் தோன்றுமாறு- கலையினின்றுந் தோன்றும் வித்தையினில் சாத்துவிகம் இராசதம், தாமதம் என்னும் மூன்று குணங்கள் தோன்றும். அவ்வியத்திலே - சிததமும், புத்தியுந் தோன்றும். புத்தியிலே அங்காரந தோன்றும்; அது பூதாதி, வைகாரி, தைசதம் என மூன்று வகைப்படும். அவற்றுள் தைசதத்திலே மனமும், ஞானேந்திரியம் ஐந்துந் தோன்றும். வைகாரியிலே கன்மேந்திரியம் ஐந்துந் தோன்றும். பூதாதியிலே தன் மாத்திரைகள் ஐந்துந் தோன்றும. தன் மாததிரைகள் ஐந்திலும் பஞ்சபூதங்களும முறையே பிறக்கும். இம்முறையாக அசுதத தததுவம் இருபத்துநான்கு வகைப்படும். அவற்றுள் ஆகாயததின் குணம் சததமாம், வாயுவின் குணம சத்தமும் பரிசமுமாம், தேயுவின் குணம் சத்தமும் பரிசமும் உருவமுமாம். அப்புவின் குணம் சத்தமும்,

பரிசமும், உருவமும், இரதமுமாம். பிருதிவியின் குணம் சததமும் பரிசமும், உருவமும், இரதமும் கந்தமுமாம். இவ்வாறே தத்துவங்கள் முப்பத்தாறுந் தோன்றி யொடுங்கு முறைப்படியே சிருஷ்டி செய்து சருவான் மாக்களுக்கும் இன்பத்தையுந் துன்பத்தையு மூட்டு வித்துப் பந்தபாசத்தைப் பருவங்கண்டு போக்கி மோக்ஷத்தைச் சிவபிரானே யருளிச்செய்வர். ஞான மதிகரிக்குமிடததுச் சிவதத்துவந் தோன்றும். ஞானத் தோடு கிரியை சமப்பட்டு நின்றால் சதாசிவ தத்துவந் தோன்றும். இந்த இரண்டினிலே கிரியை அதிகப்பட்டு நின்றால் ஈசுவர தத்துவம் தோன்றும். ஞானம் அதிகப் பட்டு நின்றால் வித்தியாதத்துவந் தோன்றும். இந்த தத்துவங்கள் சிவபிரானுக்கு இலயபோக அதிகாரங்க ளடைதற்கு நிமித்தகாரணமாயிருக்கும். இப்படி யதிகாரங்களடைந்தசிவபிரான் இச்சாசத்தி,கிரியாசத்தி, ஞானசத்தியைச் சேர்ந்து நின்று மாயையைக் கலக்கும் படி செய்து அதினின்றுந் தநுகரண புவன போகங்களை யுண்டுபண்ணி அவைகளை யானமக்களடையும்படி செய்து யுகாந்த காலத்திலே யெல்லாவற்றையு முண்டாக்கிய வாறே யொடுக்கித் தாமொருவரே யிருந்து நிற்பர். இவ் விதம் நடந்துவருமியற்கையை யறிந்தவாறு முனிவர் களே! உங்களுக்குச் சொன்னோம். இனி மலைகள் மூன்றும வரம்பெற்ற கதையினைச் சொல்லுவோமென்று சூதமுனிவர் அருளிச்செய்தனர்.

12. வரைகள் வரம்பெற்ற சருக்கம்.

வேத தீர்த்தக் கரையின்கண்ணே மேற்கூறிய மலைகள் மூன்றும் ஆகார நித்திரையை ஒழித்து ஐம்புலன்களையும் ஒடுக்கிப் பரமேஸ்வரனை நோக்கித் தவஞ்செய்துகொண்டிருக்குங் காலத்திலே சிவராத்திரி தினத்தில் கோடி சூரியர்கள் கூடினாற்போலும் ஒரு சோதியுருக்கொண்டு சிவபெருமானெதிரே தோன்று தலும் மலைகள் மூன்றும் ஞானதநிறைந்து சிரசிலே கைகுவித்து வணங்கி எல்லாவுயிருந் தானு மெங்கு நிறைந்த முதற் பரம்பொருளே! எங்களை யடிமைகொண்டருளுக என்று தியானிக்க நிட்களரூபி யாகிய சிவபெருமான் சகளவுருவங்கொண்டு காட்சி தந்தருளத் தரிசித்துப் பற்பலவிதமாகத் தோத்திரஞ் செய்துகொண்டு மூன்று மலைகளும் நிற்க, பரமேசுரன் கருணைகூர்ந்து தேவதச்சனை வரவழைத்துப் பொன்னு லும் மணியாலும் ஆதனம் கிரீடம் ஆபரணம் ஆடை குடை சாமரம் முதலானவைகள் வகைக்கு மும்மூன்று செய்து வரும்படி உத்தரவு செய்து சந்திர மண்டலத் தைச் சிங்காதனத்தின்மேல் வைத்து அதன்மேல் பொதிய மலையை அரசனாக்கியேற்றிச் சந்திரபாண்டிய னென்னும் நாமம் புனைந்து கிரீட முதலியவற்றையுந் தரித்துப் பின்பு சையமலையையும் தருத்தரமலையையும் சோழன் சேரன் என்னும் பெயரையுடைய இரண்டு

அரசராக்கி மகுடமுதலாகிய வெல்லாம் அணிந்து வேண்டிய வரங்களையுந் தந்தருளிப் பரமேசுரன் வயிராசலிங்கத்துள்ளே மறைந்திருந்தனர். அப்பால் மூன்று அரசர்களுந் தங்கள் தங்களுக்கு வரையறுக்கப்பட்ட நாட்டிலே சென்று அரசாட்சி செய்திருந்தார்களென்று சூதமுனிவர் சொல்ல நைமிசாரணியவாசிகளாகிய முனிவர்கள் கேட்டு மகிழ்ச்சியடைந்து சந்திரபாண்டியன் அரசுசெய்த வெற்றித்தன்மையைச் சொல்லவேண்டுமென்று வினவச் சூதமுனிவர் சொல்லுவாராயினர்.

---

13. சந்திரபாண்டியச் சருக்கம்.

சந்திரபாண்டியனென்னும் அரசனானவன், பகையரசர்களையெல்லாம் பொருதுவென்று பின்பு வித்வான்களும் மந்திரிமாரும் சேனைத்தலைவர் முதலானவர்களும் தன்னைச் சூழ்ந்திருக்கச் செங்கோல் செலுத்தி உலகத்தை இரக்ஷித்துவரு நாளிலே, அசுவமேதயாக முதலாகிய பற்பல யாகங்களைச் செய்தும் புத்திரனில்லாமையால் புத்திரகாமேட்டி யாகத்தை விதிப்படி செய்து முடித்து ஒரு சற்புத்திரனைப் பெற்றான். அந்தப் புத்திரனுக்கு விக்கிரமசிங்கன் என்று நாமகரணமிட்டுச் சகல கலைகளுங் கற்பித்துவரும்போது விவாகஞ் செய்யும் பருவம் விக்கிரமசிங்கனுக்கு வரவும், சந்திரபாண்டியன் மந்திரிமார்களை வரவழைத்து ஆலோசித்து எல்லா

நற்குண நற்செய்கைகளும் அமைந்த புத்திரி எந்த எந்த அரசனிடத்திருக்கிறாள் என்று கேட்ட மந்திரிமார் சிலர் சொல்லுவார்: தேவரீர் கூறிய சகல இலக்கணமும் அமைந்த பெண்ணானவள் வருணராசனிடத்திலிருக்கின்றாள்; அவள் பெயர் கனகசுந்தரியென்று சொல்ல, அந்தப் பெண்ணை வருணராசனிடஞ்சென்று விக்கிரமசிங்கனுக்கு மணம்பேசி வாருங்களென்று அரசன் கூறினான். மந்திரிமாரும் வருணராசனிடஞ் சென்று தாங்கள் வந்தகாரியஞ் சொல்லிச் சம்மதிக்கும்படி செய்து திரும்பிவந்து அரசனுக்குத் தெரிவித்தார்கள். உடனே பட்டணம் முழுதும் அலங்காரஞ்செய்து ஒரு சுபமுகூர்த்தத்தைக் குறித்து அரசனிருந்தான். அந்த முகூர்த்தத்தைத் தெரிந்து வருணராசன் தன் புத்திரியாகிய கனகசுந்தரியைச் சகல தேவர்களுடனே அழைத்துக்கொண்டு வந்து விக்கிரமசிஙகனுக்குப் பாணிக்கிரகணஞ் செய்துகொடுத்து யானை தேர் பரி ஆடை ஆபரணம் முதலியவைகளும் வரிசையாகக் கொடுத்துத் தன்னிருப்பிடத்துக்குச் சென்றான். பின்பு விக்கிரமசிங்கபாண்டியன் தன் மனைவி கனகசுந்தரியுடன் காமக் கடலின் மூழ்கிச் சிலநாட் கழித்தபின்னர் புத்திரனைவேண்டி முக்களாநிழலமர்ந்த சிவலிங்கப் பெருமானை யுபாசித்துத் திருவருளால் ஒரு புத்திரனைப் பெற்றான். அப்புத்திரன் சிவபெருமான கருணையினாலே பிறந்தபடியால கருணாகர பாண்டியனென்னும்

நாமகரண மிடப் பெற்று வளர்ந்து அரசர்களுக்குரிய வில்வித்தை முதலிய நூல்களெல்லாங்கற்று விவாகஞ் செய்து சில நாள் சென்றபின் ஒரு புத்திரனைப் பெற்றான். அப் புத்திரனும் அவ்வாறே ஒரு புத்திரனைப் பெற்றான். பின்பு விக்கிரமசிங்க பாண்டியனுக்குச் சந்திரபாண்டியன் முடிதரித்துச் செங்கோல் கொடுத்து அரச நீதியைப் போதித்துவிட்டுத் தவஞ்செய்து சிவபதமடைந்தான். அதன்மேல் விக்கிரமசிங்க பாண்டியன் தன் பெயரினால் விக்கிரமசிங்கபுரம் என்றொரு நகரம் உண்டுபண்ணி அதிலே அரசாட்சி செய்திருந்தான்.

---

14. நாட்டுச் சருக்கம்.

தமிழ்ச்சங்கம் இருந்துள்ள மதுரைமா நகரமும், வேணுவனம் என்னும திருநெல்வேலியும், இலக்குமி முதலியோர் பூசித்த திருப்புடைமருதூரும், அத்திரி மகாமுனிவராலே ஆராதிக்கப்பட்ட சிவசயிலமும், அகத்தியமுனிவர் பூசை செய்த திருக்குற்றாலமும், தமது திருமேனியிலே திருமுகம் பெற்றிருக்கின்ற சிவலிங்கமூர்த்தி எழுந்தருளியிருக்குங் கருவைநல்லூரும், புன்னை நிழலிற் புற்றிடங்கொண்டு சிவபிரானெழுந்தருளிய இராசை என்னும் சங்கரநயினார்கோவிலும் முதலாகிய சிவஸ்தலங்கள் பெற்ற பாண்டியனது நாட்டின் கண்ணே திருமுள்ளிநாடு என்று ஒரு நாடு உண்டு.

அந்நாட்டிலே பல வித வாத்திய ஓசையும், அரச நீதியும், வித்துவான்கள் பாடல் வளமும், தவஞ் செய்யும் முனிவருக்கு இகபரங் கொடுக்கின்ற மேன்மையும் பிற வளங்களும் வளர்ந்து வருவனவாம். அந்த நாடு பூமிதேவிக்குத் திலகம் போலவும் பிரகாசிக்கும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் இந்த நான்கு நிலங்களிலும் உள்ள பலவித வளங்களும் மலியப்பெற்றுப் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் ஆகிய இந்நான்கு உத்தம குலத்துப் பெருங் குடிகளாலும் மற்றைய குடிகளாலும் மேற் கூறிய வளங்களை அநுபவித்து வர மாதந்தோறும் மூன்று மழை மேகம் பொழியப் பெறும். இலக்குமி வாசஞ் செய்யும் சிறப்புத் தங்கிய அந்த நாட்டின் வளததைச் சொன்னோம் இனித் தமிழ் வளம் பெருகிய சிங்கைமா நகரத்தின் வளத்தைச் சொல்லுவோம்.

---

15. நகரச் சருக்கம்

பொன்னினாற் செய்யப்பட்டுத் தன்னைச் சூழ்ந்திருக்கின்ற மதிலானது தான் தரித்துக்கொண்ட பீதாம்பரத்துக்குச் சமானமாகும் விக்கிரமசிங்கபுரம் என்னும் நகரததிலே இல்லையென்னுஞ் சொல் கிடையாது. ஒருவரை யொருவர் அலைக்குங் கொடுஞ் சொல்லுங் கிடையாது. வீதிகள் தோறும் அரசாது யானைகளும்

தேரும் குதிரையும் முழங்கும் ஓசையும், திருவிழா முழக்கமும் உண்டாம். கல்விப் பொருளும், செல்வப் பொருளும் செழிப்புற்றிருத்தலாலும், செங்கோலால் அரசர்க்குப் பகையால் விளையும் போரின்மையாலும், ஆடவர் மகளிரைப் பிரிதற்கிடம் இல்லாமையால் மன்மதனுக்கு வெற்றி யென்பதில்லையாம். அந்தணர் செய்கின்ற யாகசாலையும், வேதம் ஓதுசாலையும், அன்னசாலையும், கல்விச்சாலையும் வேண்டும் இடந்தோறுமுள்ளனவாம். மாடங்களிலே மயில்கள் போலே பெண்கள் நடனமாடுவார்கள்; ஊசலாடுவார்கள். தடாகங்களெல்லாம் தம்மிடத்துள்ள தாமரை, நீலோற்பலம், சைவலம், சங்கு, மீன் முதலிய பொருள்கள் தமக்கு அவயவமாகப் பெண்கள் போலத் தோன்றாநிற்கும். பூஞ்சோலைகளெல்லாம் மேலோங்கி வளர்ந்து கற்பகவிருக்ஷங்கள் வாங்கிக்கொள்ளப் பழங்களைக் கொடுக்கும். அன்றியும் தளிர், அரும்பு, கொடி, வண்டு முதலியவைகளெல்லாம் மாதர்கள் போலவுந் தோன்றும். கடைவீதிகளெல்லாம் வேண்டுவோர்க்கு வேண்டும் எல்லாப் பொருள்களையும் நல்கலாலே தமிழை நிகர்ப்பதாகத் தோன்றும். யாசகரில்லாமையால் கொடுப்பவருமில்லையாம். மகளிர் ஆடற் காலத்திலே பறித்தெறிந்த முத்துமாலைகள் வீதிகள் தோறும் குப்பையாக நிறைந்து சந்திர கிரணத்தை வீசாநிற்கும். சங்கு முத்தமும், மூங்கில் முத்தமும், கரும்பு முத்தமும்,நெல்லின் முத்தமும்,பரந்து கிடக்கும்

இடமானது நக்ஷத்திரங்கள் நிறைந்த ஆகாயத்தை யொக்கும். மாடங்கள்மேல் வைத்த தங்கத் தூபிக ளெல்லாஞ் சூரியனைப் போலத் தோன்றும். நடன சாலையிலே நடிக்கின்ற பெண்கள் சித்திரம்போலக் காணப்படுவார்கள். இவை முதலாகிய பற்பல வளங் களையுந் தழுவிச் சிங்கை நகரமானது தன்னிடத்து நீங்காது வசிப்பவர்களுக்கு வேண்டிய போகத்தையும் மோக்ஷத்தையுங் கொடுக்கும்.

---

16. விக்கிரம சிங்க பாண்டியச் சருக்கம்

குபேரனுடைய அளகாபுரிப் பட்டணமும் இந்த வளமுடையதல்லவென்று சொல்லப் பலவளங்கள் நிறைந்த விக்கிரமசிங்கபுரத்திலே விக்கிரமசிங்கபாண்டி யன் பகை அரசர் வணங்க அரசாட்சி செய்திருக்குங் காலத்திலே தன் புத்திரனாகிய கருணாகரபாண்டியனுக்கு உரிய காலங்களில் செய்யவேண்டிய கிரியைகளெல்லாஞ் செய்வித்துச் சகலவிதமான கலைகளையுங் கற்பித்து வந்தான். பின்பு ஒருகாலத்தில் அங்கிரா முனிவரைச் சென்று தரிசித்துத் தோத்திரஞ்செய்து மனுதரும சாத்திர நீதியை அடியேனுக்கு உபதேசித்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தான். அதுகேட்ட அம் முனிவரும் அரசன் மனமகிழ்ச்சி கூரும்படி அரசர்களுக் குரிய மனுதரும சாத்திரத்தின் நீதிவரலாறு முழுவதும்

கிரமமாக உபதேசஞ் செய்தருளினர். அதன்மேல் விக்கிரம சிங்கபாண்டியனாகிய இராசன் தான் கேட்ட உபதேசத்தின் முறைப்படி அநேக காலம் அரசாண்டு வந்து பின்பு புத்திரனாகிய கருணாகர பாண்டியனுக்குக் கிரீடந்தரித்துச் செங்கோலும் அரசும் கொடுத்துவிட்டுக் காட்டின்கண்ணே சென்று பின்னும் தனது ஆசாரியரான அங்கிரா முனிவரைக்கண்டு வணங்கிச் சுவாமி! அடியேனுக்கு உலக வாழ்க்கையிலே வெறுப்புவந்ததினாலினித் தத்துவப் பொருளை அடைதற்கு விரும்புகின்றேன். அதற்குரிய ஞானசாதனங்களைப் போதிக்க வேண்டுமென்று கேட்டான். அந்த மகாமுனிவரும் அவன் பக்குவநோக்கிப் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருளினியல்பையுங் கிரமமாகப் போதித்தனர். அரசன் அவ்வுபதேசத்தை உண்மையாகத் தெளிந்து முக்களாலிங்கருடைய திருவடிகளை இடைவிடாது தியானித்து நிட்டை கூடியிருந்து திருக்கயிலாச மலையைப் போய்ச் சேர்ந்தான்.

---

17. கருணாகரபாண்டியச் சருக்கம்

கல்வியறிவிற் சிறந்த வித்வான்களிடத்திலே அன்பு செலுத்திவருங் கருணாகரபாண்டியன் தன்னுடைய பாட்டனாகிய வருணராசன் பட்டணத்துக்கு ஆசை மிகுதியினாலே போய்ச் சேர்ந்தான். வருணராசன்

கண்டு மிகுந்த மனமகிழ்ச்சியுடன் கருணாகர பாண்டியனுக்குத் தகுந்த மரியாதை யுபசாரஞ் செய்து வேண்டிய வரிசைகளுங் கொடுத்தான். சிலகாலஞ் சென்றபின் வருணராசன் புத்திரனாகிய தன் மாமனால் பெறப்பட்ட இலக்குமிபோன்ற புத்திரியாகிய கலியாணி என்னும் பெண்ணை விவாகஞ்செய்து அம்மனைவியோடு சகல வரிசைகளும்பெற்று விக்கிரமசிங்கபுரம் வந்து சேர்ந்து தன்னுடைய மாதாவை வணங்கித் தன்னுடைய குலதெய்வமாகிய முக்களாலிங்க மூர்த்தியைக் காலந் தோறும் தரிசித்துச் சிலநாள் சென்ற பின்பு, தன் பெயராலே கருணைபுரி என்னும் பட்டணம் உண்டு பண்ணி அதிலே அரசுசெய்து வந்தான். இப்படி அரசு செய்துவரு நாளிலே ஒரு புத்திரனைப் பெற்றான். அவனுக்கு இராசராச பாண்டியன் என்னும் நாம காணம் இட்டுப் படைக்கலம் முதலியவை பயிலும்படி செய்வித்துச் சந்தோஷம் உற்றிருந்தான். அதன்மேல் இராசராசபாண்டியன் பகையரசர்களைப் போரிலே வெற்றி செய்து வருகிற திறத்தையறிந்து பிதாவாகிய கருணாகர பாண்டியன் மகுடஞ்சூட்டி வைத்துவிட்டுத் தவததின் மேற்சென்று பரமேசுரனைத் தியானித்து நிட்டைகூடிச் சிவலோகத்தை யடைந்தான்

---

18. இந்திரத்துய்மினன் திக்கு விசயச் சருக்கம்

நிலைபேறுடைய புகழாலோங்கிய இராசராச பாண்டியனாகிய அரசன் நாகராசனுனை குமுதனென்பவன் பெற்ற கவுமதி யென்னும் பெண்ணை விவாகஞ்செய்து பன்னிரண்டு புத்திரர்களைப்பெற்றுப் பின்பு வயிராச லிங்கத்தைத் தியானித்து வழிபாடுபுரிந்து திக்குவிஜயஞ் செய்துவரும்படி அடியேனுக்குத் திருவருள் சுரக்க வேண்டுமென்று பிரார்த்திக்க, அந்த லிங்கத்தினின்றும் சிவபெருமான் வெளிப்பட்டு அரசனுக்குச் சேனையாகச் சில பூதகணங்களையும் மாகாளனென்பவரையும் இந்திரத் துய்மினன் என்னும் ஒரு சிறப்புப் பெயரையும் பகை யரசரை வெல்லும் வலிமையையுங் கொடுத்து மறைந் தருளினார். உடனே ரதகஜதுரகபதாதிகளாகிய நால் வகைச் சேனைகளுந் தன்னைச் சூழ்ந்து வரவும் கடல் முழக்கம் போலப் பலவித வாத்தியம் முழங்கவும் அதி வேகமாய்ச் செல்லும் ஒரு விமானத்திலேறித் திக்கு விசயங்குறித்துச் சிங்கள தேசத்தை நோக்கிப் பயணம் புறப்பட்டு இடையிடையே வந்தெதிர்த்த அரசர்களை யெல்லாம் பொருதுவென்று சென்று சிங்கள தேசத்தி லும், சீன தேசத்திலும், சாகவ தேசத்திலும், துளுவ தேசத்திலும் குடக தேசத்திலும், கொங்கண தேசத்தி லும், கன்னட தேசத்திலும், கொல்ல தேசத்திலும்,

தெலுங்க தேசத்திலும், கலிங்க தேசத்திலும், கங்க தேசத்திலும், வங்க தேசத்திலும், மகத தேசத்திலும், கடார தேசத்திலும், குசல தேசத்திலும் இன்னும் நாவலந் தீவிலுள்ள எல்லாத் தேசங்களிலும் சென்று அங்கங்கேயுள்ள அரசர்களோடு போர்செய்து அவர்களை வென்று அப்பால் மகாமேரு மலையை நோக்கிப் போய் விறலி யென்னுந் தீவிலுள்ள அரசர்களை யெல்லாம் வென்று திறை வாங்கி வரும்படி தன் சேனைகளை அனுப்பிவிட்டுக் கிருட்டிணை நதிக்கரையிலே ஒரு இலிங்கந்தாபித்து விதிப்படி சிவபூசை செய்துகொண் டிருந்தான்.

இவ்விதம் பூசைமுடித்த பின்பு,இந்திரத்துய்மினன் ஆகிய அரசன் அந்நதிக் கரையிலொருபுறம் தவஞ் செய்து கொண்டிருக்கிற காசிபரிஷியால் ஆசீர்வதிக்கப் பெற்று, அவர் செய்த விருந்துக்கிசைந்திருந்து முக்களா மூர்த்தி திருவருட் பிரபாவததை எடுத்து அம்முனி வருக்கு மிகவுஞ்சொல்லி விடைபெற்று இந்திரசேன மலையினின்று வரும் ஆங்கிரசநதிக் கரையைப் போய்ச் சேர்ந்தான். அந்நதிக்கரை யிரண்டு பக்கத்திலுமுள்ள அரசர்கள் வந்து வணங்கித் திறை அளப்ப வாங்கிக் கொண்டு கோபந்தணிந்திருந்தான். பின்பு அரசன் அவ்விடத்திலுள்ள ஆங்கிரச முனிவரை வணங்கி அவரிடத்திலும் வயிராசலிங்கத்தின் பெருமையெல்லா மெடுத்துக்கூறி மீண்டு சாவித்திரி நதிக்கரையைச்

சேர்ந்தான். அந்நதிக்கரையிலுள்ள உத்தமனென்னும் அரசனானவன் வந்து இந்திரத்துய்மினனை வணங்கி, மகராசனே! என்னுடைய புத்திரிமார்கள் பன்னிருவரையும் உன்னுடைய புத்திரர் பன்னிருவருக்கும் விவாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்று பிரார்த்தித்தான். அதை கேட்டு இந்திரத்துய்மினன் மனமகிழ்ச்சி கூர்ந்து தன் புத்திரர் பன்னிருவருக்கும் முறையே விவாக முடிப்பித்து, உத்தமனென்னும் அரசன்றன்னுடனே வரச் செல்லும்போது தேவர்கள் வேண்டுகோளுக்கிசைந்து ஆளிமுகமுடைய ஒரு அரசனோடு நெடுநேரம் யுத்தஞ் செய்து அவனைக் கொன்று, தேவர்களுடைய துன்பத்தைத் தணித்து, சாவித்திரி நதிக்கரையிலுள்ள சேமதேசஞ் சென்று அரசர்களெல்லாந் திறைகொண்டுவந்து குவித்து வணங்க அவரவர்களுக்கு அபயந்தந்து மீண்டு சத்தியவதி நதிக்கரையில் ஒரு மாதகால மிருந்தான். அதன்மேல் அரசன் விமானத்தின்மேலேறிச் சன்மலி தீவிலே சென்று கருடாலயத்தைத் தரிசித்துப் பகையரசர் தன்னை வணங்கச்சென்று அநேக நதிகளிலே ஸ்நானஞ்செய்து குசைத் தீவை அடைந்து அங்குள்ள புகைவரை வென்று போய் இரசகுல்லியைக் கடந்து, மதுகுல்லி நதிக்கரையையடைந்து அங்குள்ள மாற்றாரோடு சண்டைசெய்து வென்று சக்கரசிருங்க மலையைச் சார்ந்து சந்திரகாந்தத்தால் ஒரு சிவலிங்கந்தாபித்துக் கிரமப்படி பூசைசெய்திருந்து மீண்டு சில நதிகளைக்

கடந்து, கபில முனிவருடைய ஆசிரமத்திற்குப் போய் அவரை வணங்கி முக்களாலிங்கர் திருவருளை வியந்து பேசி விருந்துநுகர்ந்து விடைபெற்றுக்கொண்டு சித்திர கூடமலையிற்போய் அங்குள்ள பகைவரை ஒடுக்கி அப் பாற்போய் சுருதிவிந்து நதிக்கரையைச் சார்ந்து சத்துரு சங்காரஞ்செய்து கருப்பை நதியிலே மூழ்கியெழுந்து சென்று கிருதச்சுமா நதிக்கரையைச் சேர்ந்து அங்கு உள்ள பகைவரையெல்லாம பொருதுதளையிட்டுக் காவ லில் வைத்துவிட்டு அப்பாற் சென்று ஆங்காங்குள்ள சில அரசர்கள் வணங்கச் சென்று இடப முதலாகிய நான்கு மலைகளைப் பார்த்து, அமிர்தோகை மு,தலாகிய ஐந்து நதிகளிலேயும் ஸ்நானஞ் செய்து வனற்பதி நதிக் கரையைச் சேர்ந்திருந்தான்.

அக்காலம் வந்த சிவராத்திரி தினத்தில் அந்நதிக் கரையில் முக்களா நீழலில் முளைத்த சிவலிங்கப்பெரு மான் திருப்பெயராலொரு சிவலிங்கந்தாபித்துப் பூசை செய்து, அதன்மேல் வெண்ணிறந்தாங்கிய தயிர்க்கடலைக் கடந்துபோய்ச் சுக்கில நதியிலே மூழ்கியெழுந்து ஆங்கு வந்தெதிர்த்த பகையரசரைக் கொன்றுவிட்டுப் புட்காரத் தீவைப் போய்ச்சேர்ந்தான். அதன்பின்பு நெடுந்தூரம் போய்ப் பலபத்திர மலையிலுள்ள பகைவரை வென்று தூமான தேசத்தையடைந்து அந்த தேசத்தரசனுடன் சிலநாள் யுத்தஞ்செய்தான். அவன் மிகுந்த பலமுள்ள சேனைகளையுடையவனுதலால் அவனை வெல்வதற்கு இனி

நம்மால் முடியாது என்று முக்களாலிங்கராற் கொடுக்கப் பட்ட பூதப்படைகளை நினைத்தான். அப்படைகளெல்லா மொருங்கே வந்து பெரும்போர் செய்து தூமான தேசத் தரசன் சேனைமுழுவதுங் கொன்று திரிபுரசங்காரம் போலத் தேசமுழுவதுந் தீப்பற்றியெரியும்படி செய்து சாம்பராக்கி விட்டன; அதுகண்டு இந்திரத்துய்மினனு கிய அரசன் பார்சிதை நதியையடுத்து ஸ்நானஞ்செய்து தூமான தேசத்தரசன் புத்திரருக்கு மகுடஞ்சூட்டி அவர் கொடுக்குந் திறைகளை வாஙகிக்கொண்டு சத கேசரை நதியைப் போயடைந்து அந்நதிக்கரையிலுள்ள வெற்றிவீரருடன் சண்டைசெய்து சயங்கொண்டு பஞ்ச நதிக்கரையின் பக்கத்தையடைந்து ஒரு மாதம் வரையும் அவ்விடத்தில் வசித்திருந்தான்.

இப்படி யிருக்குநாளிலே சித்திரரத தேசத்து அரச னுகிய வெகுரூபி யென்பவன் தன்னைவந்துகண்டு திறை கொடுக்கவில்லை யென்று கோபங்கொண்டு ஒரு தூதுவனை யனுப்பினுன். அந்தத தூதுவன் வெகுரூபியென்னும் அரசனிடஞ் சென்று வணங்கி இராசனே! எங்கள் மகாராசன் இங்குவந்து ஒரு மாதமாகியும் நீர் வந்து திறை கொடுத்து வணக்கஞ் செய்யாமலிருப்ப தென்ன? இனியாயினும் வந்து சமாதானஞ் செய்துகொள்ளும் இல்லாவிடில் யுத்தத்துக்காவது வாருமென்று தனது அரசனது கட்டளையைக் கூறுதலும், வெகுரூபி யென் னும் அரசன் கேட்டு மந்திரிமாருடனே ஆலோசனை

செய்யும்போது மந்திரிமார் சொல்வழி நில்லாது போருக்குத் தன்னுடைய அளவற்ற சதுரங்க சேனையை யெழுப்பிக் கொண்டுபோய் இந்திரத்துய்மினன் சேனையை யிடைவிடாது வளைந்து கொடிய யுத்தஞ் செய்தான். இந்திரத்துய்மினனும் இதுவரையும் இப்படிப் பலமுள்ள பகைவரில்லை யென்று பெரும் போர் செய்து வெகுரூபி சேனையுடனே யிறக்கும்படி செய்தான்.

இங்ஙனம் இறந்த வெகுரூபி மன்னனுடைய புதல்வன் வந்து திறை கொடுத்து வணங்கவும், உடனே அவனுக்கு மகுடந்தரித்து அரசாளும்படி வைத்து விட்டுத தேவபாலகிரியைப் போய்ச் சேர்ந்து அங்கு நின்றும் சிரகை என்று சொல்லும் நாட்டைக் கடந்து போய்த் திருநிச நதிக் கரையின்கட் சென்று அந் நதிக் கரையில் ஒரு மாதமிருந்து அங்கு நின்றும் எழுந்து கீழ்த் திசையிலுள்ள ஒரு பொற்றாமரைத் தடாகத்திலே ஸ்நானஞ்செய்து அங்கு நின்றும் போய்ப் பிரமதேவர் தவஞ்செய்து கொண்டிருக்கும் வனததையடைந்து, அவ்வனத்திலுள்ள மலையின் தென்பக்கமுள்ள பொற்றாமரைத் தீர்த்தத்திலே படிந்து மேற்றிசையிலே சென்று கற்பமுறைவழுவாமல் ஒரு சிவலிங்கந்தாபித்து அதற்கு வயிராசலிங்கமெனப் பெயரிட்டுப் பூசிதது வணங்கிச் சில நாளிருந்து பல வளங்களையும் பார்த்து மகிழ்ந்து, அம்மலையினின்றும் இறங்கி மிக உயர்ந்த இரமணகிரியிலே யேறிப்பார்த்து இம்மலையின் வளமெங்கு மில்லை

என்று சந்தோஷித்து அம்மலையின் மேலே பொன்னாலே ஐம்பத்தொரு புகழ்த்தம்பத்தை நிலை நிறுத்தி விட்டு அப்பால் அம்மலையினின்றும் இறங்கிச் சுத்த நீர்க்கடலைக் கடந்து சக்கரவாளமலையை அடைந்து அங்கே ஐந்து வருடம் வரையுமிருந்தான்.

இப்படித் திக்கு விசயஞ்செய்து வெற்றிமாலையைத் தரித்துச் சந்தோஷித்திருக்கும் இந்திரத்துய்மினனாகிய பாண்டியன் முக்களாநீழலில முளைத்த வயிராசலிங்க மூர்த்தியைத் தரிசிக்கும் ஆசையதிகரிக்க உடனே ஏழு சமுத்திரங்களையும் அதனுள் விளங்கும் ஆறு தீவுகளையுங் கடந்து மகேந்திரமலையை வந்துசேர்ந்து கண்ணுவர் காசிபர் முதலிய மகாமுனிவர் தவஞ்செய்யும் ஆச்சிரமத்தையடைந்து அம் முனிவரையெல்லாம் வணங்கி அவரது ஆசிபெற்றுக்கொண்டு மீண்டு தன்னுடைய கருணைபுரி யென்னும் பட்டணத்தை யடைந்து தன்னுடைய பிதாமாதாவை வணங்கி விக்கிரமசிங்கபுரஞ் சென்று அங்கு நின்றும் பாவநாசத்திற் சென்று முக்களாநீழலிற்றோன்றிய வயிராசலிங்க மூர்த்தியைத் தரிசித்து உள்ளங்குளிர உரோமஞ் சிலிர்ப்ப உரை தடுமாறத் தோத்திரஞ்செய்து பரவசமடைந்து பேரானந்தமுற்று நாடோறுந் தியானித்துத் தன்னுடைய பிதாவின் பேராலே செய்த கருணைபுரியில் வந்து அரசாட்சி செய்து கொண்டிருந்தான்.

---

19. இந்திரத்துய்மினன் சாபமெய்திய சருக்கம்

ஐம்பதுகோடி யோசனை விசாலமுள்ள இந் நில வுலகத்தில் திக்கு விசயஞ் செய்துவந்த இந்திரத்துய் மினனுடன் சென்ற கணநாதராகிய மாகாளனார் சரித்திரத்தைச் சொல்லவேண்டுமென்று நைமிசாரணிய முனிவர்கள் கேட்கச் சூதமாமுனிவர் சொல்லுவார். திக்கு விசயஞ்செய்து அரசனுடனே கூடவந்து பூத கணங்களோடு பாவநாசத்தில் முக்களா நீழலிற் போய் வயிராசலிங்கத்தை நமஸ்கரித்துத் திருவருளால் அந்த இலிங்கமூர்த்தியின் ஆலயத்தின் மேலைவாயிலிற் காவல் கொண்டிருந்தனரென்ன, முனிவர்கள் மீட்டும் வணங்கி இந்திரத்துய்மினன் பின்னர் யாது செய்தானென்று கேட்கத் திரிகாலமுணர்ந்த சூதபுராணிகர் சொல்லுவார். முக்களா முதல்வராகிய சிவபிரானைத் தரிசித்து மீண்டு அங்கிரா முனிவரையுங் கபிலமுனிவரையும் வணங்கி இந்திரத்துய்மினன் கருணாகரபுரியை அடைந்து அரசு செய்து வரும்போது தன்னுடன் திக்கு விசயங் காண வந்த சம்பந்தியாகிய உத்தமன் என்னும் அரசனுக்கு வேண்டிய வரிசைகள் கொடுத்து அவனைத் தனது தேசத்துக்குப் போகும்படி அனுப்பிவிட்டுப் பின்பு பொதியமலையைப் பிரதக்ஷணஞ்செய்துவர உத்தேசித்து முக்களா நீழலிற் சிவபெருமானைப் பணிந்து விடை

பெற்றுக்கொண்டு சதுரங்க சேனையுடன்போய்ப் பாற் சமுத்திரத்தின் கரைப்பக்கத்திலுள்ள பாலாற்றிலே தீர்த்தமாடிக் கரையேறி அங்கெழுந்தருளி யிருக்கும் சிவபிரானைத் தரிசித்துப் பின்பு சமீபத்திலே நீலமேகம் போலத் திருமால் வந்து நிற்பதையும் பார்த்துத் தானும் ஐம்புலன்களையு மொடுக்கிச் சிவமயமாகத் தன்னைமறந்து தவஞ்செய்து கொண்டு சிலநாளிருந்தான்.

அங்ஙனந் தவஞ்செய்திருக்கு நாளிலே ஒருநாள் அகத்தியமாமுனிவர் அவ்விடத்துக்கு வந்தனர். அவரைக் கண்டு எழுந்து வணங்கி இந்திரத்துய்மினன் அருக்கிய பாத்திய முதலிய வுபசாரஞ் செய்யாமையினாலே அகத்திய முனிவர் திக்கு விசயஞ்செய்து விட்டோ மென்ற இறுமாப்பிலிருக்கின்றானென்று நினைந்து அவனைப் பார்த்து நீ காட்டானையாகுக வென்று சபித்தனர்; உடனே இந்திரத்துய்மினன்றெரிந்து அம்முனிவர் திருவடியின் கீழே விழுந்து நமஸ்கரித்துச் சுவாமீ! அடியேன் அறியாது செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டுமென்று பிரார்த்திக்கக் கோபந் தணிந்து நீ திக்கு யானைகளெல்லாம் வணங்க நாட்டு யானையாக இருந்து நாரதமுனிவர் சாபத்தினாலே ஊகூ வென்னும் ஒரு வித்தியாதரன் தாமரையலர்ந்த ஒரு தடாகத்திலே முதலைவடிவமாகிச் சுழன்று கொண்டிருக்கிறான். அவனுக்கும் உனக்குஞ் சாபம் நீங்குமாறு பரமேசுரனுடைய திருவருளால் விஷ்ணுமூர்த்தி வந்து

உன்னுடைய காலைப்பற்றிய அந்த முதலையைச் சக்கரத்தினாலே கொன்றுவிடுவார். அப்போது முழுதும் இச் சாபம் நீங்குமென்று சொல்லி அப்பாற் சென்று பாவநாசத்தில் வந்து முக்களாலிங்கரைத் தரிசித்திருந்தனர். பின்பு அவ்விடத்தில் வந்து தன்னை வணங்கிய சந்திரபாண்டியனுக்கு ஆசிகூறி மகா மேருமலையின் கண்ணே சென்றார். இந்திரத்துய்மினனும் அந்த க்ஷணமே யானை யுருவங்கொண்டு திரிந்தான்.

---

20. இந்திரத்துய்மினன் சாபமோசனச் சருக்கம்

நைமிசாரணிய முனிவர்களுக்குச் சூதமுனிவர் சொல்லுவார்: ஓ! முனிவர்களே! அகத்திய முனிவர் சாபத்தினாலே இந்திரத்துய்மினன் யானை வடிவங் கொண்டு கயேந்திரம் என்னும் பெயரையடைந்து மற்றை யானைகளுக்கெல்லாந் தலைமையெய்தி மகேந்திர மலையினின்றும் பொதியமலையைப் பிரதக்ஷணம் செய்யச் சென்று தென்புறத்திலுள்ள சமுத்திரத்திலே ஸ்நானஞ் செய்து சூரியனைப் பிரார்த்தனைசெய்து மேற்றிசைக்குச் சென்று பொதியமலையின் வடபக்கத்திலுள்ள திரிகூடம் என்னும் அநேக வளநிறைந்த திருக்குற்றுமலையின்கட் சென்று சிவமதுகங்கை சித்திராநதிகளிலே ஸ்நானஞ் செய்து ஆலயத்திற்சென்று, நீலமேக நிறம் பொருந்திய

விஷ்ணுமூர்த்தியை வணங்கி அங்கே சில நாள் வசித்து மாதந்தோறும் பொதியமா மலையை வலஞ் செய்து வந்தது. இந்தவிதம் பிரதக்ஷணம் செய்து வருநாளில் ஒருநாள் வழியிலே ஒரு தாமரைத் தடாகத்தைக் கண்டு அதனுள்ளே இறங்கி ஸ்நானஞ் செய்து அங்குள்ள தாமரை நீலோற்பல முதலிய பூக்களைப் பறித்தெறிந்து விளையாடிக்கொண்டிருக்கும்போது, அத் தடாகத்தினுள்ளே நாரதர் சாபத்தாலே நெடுநாளாகச் சஞ்சரிக்கும் ஊகூ வென்னும் வித்தியாதரனாகிய முதலை வந்து கயேந்திரம் என்னும் யானையின் காலைக் கவ்விபிழுத்தது. அந்தச்சமயம் யானை வருத்தமுற்று முக்களாலிங்கரைத் தியானித்துத் தோத்திரஞ்செய்து கதறியது. உடனே அதுகேட்ட முக்களாலிங்கர் திருவருளாலே விஷ்ணுமூர்த்திசென்று சக்கராயுதத்தை விடுத்து முதலையை இருகூறுகப் பிளந்தார். பின்னர் முதலைக்கும் யானைக்கும் உருவமாறிப் பழைய வுருவங் கிடைத்தலும் யானையாயிருந்த இந்திரத்துய்மினன் எதிரே நின்ற விஷ்ணுமூர்த்தியைத் தரிசித்து முக்களா முதல்வராகிய சிவபெருமானை நினைந்து தோத்திரஞ் செய்தனன். அந்தத் தோத்திரங் கேட்டவுடனே சிவபெருமான் அவ்விடத்துக் கெழுந்தருளினர். இந்திரத்துய்மினனும் ஊகூவாகிய வித்தியாதரனும் விஷ்ணுமூர்த்தியும் ஆகிய மூவரும் வணங்கித் துதித்தார்கள். பின்பு இந்திரத்துய்மினனை நோக்கி யுனக்கு வேண்டிய வரத்தைக்

கேளென்று சிவபிரான் அருளுதலும் சுவாமீ! * இந்தத் தடாகக் கரையிலே தேவரீரும் விஷ்ணு மூர்த்தியும் எழுந்தருளியிருக்க வேண்டுமென்று அரசன் பிரார்த்தித்தனன். உடனே அவ்வரங் கொடுத்துச் சிவபிரான் மறைந்தருளினர். பின்னர் அரசன் பாவநாசத்தையடைந்து வயிராசலிங்கத்தைத் தரிசித்துத் திருவருள் பெற்றுக் கருணைபுரி வந்து சேர்ந்து சிங்காதனத்திலிருந்து அரசாட்சி செய்து வந்தான்.

---

21. பஞ்சக்குரோசத் தெல்லையுரைத்த சருக்கம்.

நைமிசாரணிய வாசிகளாகிய இருடிகள் சூத முனிவரை நோக்கிச் சுவாமீ! தேவேந்திரனுக்குப் பிரமகத்தி தோஷம் வந்ததும் அத்தோஷம் நீங்கிய விதமும் அருளிச்செய்ய வேண்டுமென்று கேட்கச் சூத முனிவர் சொல்லுவார். தேவர்களுஞ் சாரணருந் தன்னைச் சூழ்ந்துநிற்க ஒரு நாள் தேவேந்திரன் சபா மண்டபத்திலே கொலுவீற்றிருக்கும்போது அரம்பையென்பவள் நடித்த நடனத்திலே தன் கருத்தைச் செலுத்தித் தேவேந்திரன் அச்சமயம் அங்கேயெழுந்தருளிய குருவாகிய வியாழ பகவானை வணக்கம்

* இந்தத்தடாகக் கரையிலுள்ள கோயிலிருக்கிற நகாதான் – அத்தியாழ் நல்லூர்.

செய்யாமலிருந்தான். உடனே குரு அவமானமெய்தி அவ்விடத்தைவிட்டு அப்பாற் சென்றார். செல்லவே தேவர்களெல்லாரும் நடுநடுங்கினார்கள். இந்திரனும் பின்பு தெரிந்து நமக்குக் குற்றம் பெரிதும் வந்ததென்று மிகப் பயந்தான். இவையனைத்துந் தெரிந்து அசுரர்கள் இந்திரனை வெல்வதற்கு இதுதான் சமயமென்று சந்தோஷித்தார்கள். இந்திரனும் அசுரர் குலத் தலைவனாகிய துவட்டாவென்பவன் புத்திரனாகிய விச்சுவ ரூபனைத் தனக்குக் குருவாக நியமனஞ் செய்து கொண்டான். இதனைத் தெரிந்த அசுரர்கள் விச்சுவ ரூபனை நோக்கி நீ எங்களுடைய தங்கை புத்திரனாக இருக்கையால் எங்களுக்குச் சாதகமான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். அவனும் அவர்கள் கருத்துக்கிசைந்து ஒப்பற்ற வஞ்சக ரூபமாகிய ஒரு கவசத்தைச் செய்து இந்திரனுக்குத் தரித்துக்கொள்ளும்படி கொடுத்துப் பின்பு ஒரு யாகஞ் செய்து அந்த யாகத்திலே தேவர்களுக்குக் கேடும் அசுரர் களுக்கு ஆக்கமும் உண்டாகும்படி சிந்தனை செய்தான்.

அதனை ஞானத்தினாலே இந்திரனறிந்து விச்சுவ ரூபனுடைய மூன்று தலைகளையும் அறுத்தெறிந்தான். அறுபட்ட அத்தலைகள் மூன்றும் மூன்று பறவைகளாகிப் பறந்துபோய்விட்டன. இங்ஙனமாகக் குரு நிந்தனை செய்ததால் இந்திரன் பிரமகத்தி தோஷத்தால் பீடிக்கப் பட்டு மிகவும் அளவுகடந்த வருத்தமடைந்தான்

இத்துன்பத்தை நீக்க வேண்டுமென்று தேவர்களெல்லாரும் யோசனை செய்து பூமிக்கும், பெண்களுக்கும், சலத்துக்கும், மரத்துக்கும் வேண்டிய வரங்களைக் கொடுத்து இந்திரன் பிரமகத்தியை நான்கு பாகமாக்கி நீங்கள் நால்வரும் ஏற்றுக்கொள்கவென்று கொடுத்து விட்டார்கள். பின்பு புத்திரனையிழந்த துவட்டா ஆனவன் இந்திரனை வெல்லும்பொருட்டு ஒரு பிள்ளையைப் பெற யாகம் ஒன்று செய்தான். அந்த யாக குண்டத்தினின்றும் விருத்திராசுரனென்னும் ஒரு அசுரன் பிறந்து, இந்திரனோடு நெடுங்காலம் யுத்தஞ் செய்துகொண்டிருந்தான். அந்த யுத்தத்துக்குத் தோற்று ஓடிப்போய் இந்திரன் பிரமதேவனையடைந்து விருத்திரனைக் கொல்லுதற்கு உபாயம் யாதென்று வினவலும், பிரமன் சொல்லுவான். இந்திரனே ! ததீசிமகா முனிவர் இருப்பிரசாயன போசனமுடையவராதலால் அவருடைய முதுகெலும்பு மிகப் பலமுள்ளது: அதனை நீ போய்க்கேட்டால் உடனே கொடுத்துவிடுவார்; அவ்வெலும்பைக் கொண்டுவந்து வச்சிராயுதஞ்செய்தால் அதுகொண்டு விருத்திரனுடைய உயிரைப் பிரித்துவிடலாமென்று கூற உடனே இந்திரன் கருணையே வடிவமாகிய ததீசி முனிவரிடஞ் சென்று வந்த காரியத்தைத் தெரிவித்தான் அம்முனிவர் மிகுந்த மகிழ்ச்சியுடன் தன் முதுகெலும்பைக் கொடுக்க வாங்கி வந்து மயனிடங்கொடுத்து வச்சிராயுதஞ் செய்து அவ் வச்சிராயுதத்தால் இந்திரன் விருத்திராசுரன் தவம்

செய்துகொண்டிருக்குமிடஞ் சென்று போர் செய்து அவன் தலையை அறுதெறிந்தான்.

உடனே விருத்திராசுரனைக் கொன்ற தோஷம் பிடித்துச் சகிக்கமுடியாத துயரத்தையடைந்து இத் துன்ப முழுவதும் நீங்குவது எவ்வாறென்று யோசினை செய்து பாவநாசத்தலத்தே முக்களா நீழலில் முளைத்த முழு மருந்தாலேதான் நீங்குமென்று துணிந்து, பாவநாசத்தை நோக்கிப் புறப்பட்டு வரும்போது பாவநாசத்துக்கு ஐந்து குரோசத்தூரத் தெல்லையிலே இருக்கிற ஒரு தீர்த்தத்தின் சமீபமாக வரும்போது தன்னைப் பிடித்த பிரமகத்தி தோஷம் நீங்கி அக்கினியிற் பட்ட பஞ்சுபோலப் போய்விட்டது. இந்திரன் அந்தத் தீர்த்தத்திற் படிந்து குணதிசையிலே சிவலிங்க பூசை செய்து பொதியமலையை நோக்கி வந்து வேத தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்து முக்களா நீழலிலெழுந்தருளியிருக்கிற சிவலிங்கப்பெருமானைத் தரிசனஞ் செய்து கணப் பொழுதிலே வேண்டிய வரங்களைப் பெற்று மீண்டு தேவலோகஞ் சென்று வெளிப்படாதிருந்த குருவாகிய வியாழ பகவானைத் தரிசனஞ் செய்து, முன்போல அரசு செய்திருந்தான். இங்ஙனம் இந்திரனுக் கருள்புரிந்த முக்களா மூர்த்தியினுடைய விக்கிரமசிங்க புரத்துக்கு நான்கு பக்கமுள்ள ஐங்குரோசத் தெல்லையே நல்ல மோக்ஷந்தருமெல்லையாகும். இந்த எல்லையிலுள்ள இரண்டு தடாகங்கள் சுரேந்திர மோக்ஷம்

என்றும் கயேந்திர மோக்ஷம் என்றும் பேர்பெற்றன. வேதங்களுணர்ந்த முனிவர்களே! இன்னும் கேளுங்கள் வேத வடிவமாகிய முக்களாவுக்கு வாயு கோணத்திலே பரமேசுரனை நோக்கி அத்திரு முனிவர் தவஞ் செய்து கொண்டிருந்தார்; அவரெதிரே சிவபெருமானெழுந் தருளி, நீ பாண்டியராசனுக்கு ஒரு குருவாகப் போவாய்; பின்னர் திரிமூர்த்திகளும் உனக்குப் பிள்ளை யாக வருவார்கள் என்று பல வரங்களைத் தந் தருளினார்

முக்களாவுக்கு ஈசானத்திலே பிரமாவினாலே பூசிக்கப்பட்ட விரிஞ்சலிங்கத்தை உரோமச முனிவர் பூசித்துத் தவஞ் செய்துகொண்டு பலவூழி காலமிருந்தார். முக்களா மூர்த்தியை வந்து வணங்கி அம் முக்களாவுக்குக் கீழ்த் திசையில் மூன்று கூப்பிடு தூரமுள்ள இடத்தில் காசிப முனிவர் தவஞ்செய்து கொண்டிருந்தார்; அவரெதிரே பொதிய மலையின் வட சாரலில் யோகியா யிருந்து மன்மதனை யெரித்த வயிராசலிங்கப் பெருமா னெழுந்தருளி அசுரர்களை யொழிப்பதற்கு வேண்டிய வரங்களைத் தந்தருளி மறைந்தனர். இந்த வரங்களை யெல்லாம் பெற்றுத் தவஞ் செய்திருக்குங் காசிப முனிவரிருக்குமிடத்துக்கு அக்கினி திக்கிலே பன்னசாலை செய்து கண்ணுவமா முனிவர் தவஞ் செய்து கொண்டிருப்பது கண்டு பாவநாசப் பெருமான் உமா தேவியாரோடும் அவரெதிரெழுந்தருளுதலும், கண்ணுவ

முனிவர் வணங்கித் தோத்திரஞ் செய்து அட்டமா சித்திகளும் அருளிச்செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்க, அப்பிரார்த்தனைப்படி வரந்தந்து சிவபிரான் தமதிருப்பிடத்துக்குச் சென்றார்.

---

22. தக்கன் வேள்வி சிதைத்த சருக்கம்

மெய்ஞ்ஞானத்திற்றெளிந்த வுள்ளத்தினையுடைய காசிப முனிவர் முதலோரது மான்மியத்தைச் சொன்னேன்: இனிப் பொதியமலையில் வந்திருந்து உயர்ந்த வட பூமியைச் சமமாக்கித் தாமிரை நதியை வரவிடுத்த அகத்தியமா முனிவரது பெருமையைச் சொல்லுகிறேனென்று சூதமுனிவர் சொல்லச் சீபருப்பத மலையின் கண்ணே கூடிய முனிவர்கள் கேட்டு, சுவாமி! பூமி உயர்ந்த காரணம் யாது? அப்பூமி சமமாக அகத்தியமா முனிவர் பொதியமலைக்கு வந்த காரணமும் திரும்பப்போகாது பொதியமலையிலேயிருந்த காரணமும் சொல்ல வேண்டுமென்று பிரார்த்தித்தலும், சூதமுனிவர் சொல்லுவார்: காசிப முனிவருக்குப் பாவநாசத்திலெழுந்தருளியிருக்குஞ் சிவபெருமான் கொடுத்த வரத்தை இந்திரன் சபையிலே நாரதமுனிவர் கேட்டு இமயமலை அரசனிடம் வந்து சொல்லி அரசனே! இனிமேல் உனக்கு உமாதேவி புத்திரியாக வருவாளென்று கூறுதலும் இமயராசன் கேட்டு மிக்க சந்தோஷமடைந்து அவ்விதம்

உமாதேவி புத்திரியாக வருவதற்கு நான் செய்ய வேண்டிய தவம் யாதென்று கேட்க, நாரதமுனிவர் சொல்லுவார்: பதினெழுத்துக்களையுடைய மந்திரத்தை மூலமந்திரத்துடனே செபஞ் செய்து தவம்புரிந்திரு என்று அருளிச் செய்தலும் அந்தப்படியே இமயவரசன் தவஞ்செய்து கொண்டிருந்தான். இனி "உமாதேவி புத்திரியாக வருதற்கு முன்னடைந்த கதையொன்றுள்ளது அதைச் சொல்லுகிறேன் கேளுங்கள்" என்று சூதமுனிவா பின்னுஞ் சொல்லுவார்.

விஷ்ணுமூர்த்தி தன்னுடைய தினப்பிரளயத்திலே பிரமதேவர் முதலிய எல்லாவுயிர்த் தொகைகளையுந் தன்னுள்ளே யடக்கிப் பரமேசுரனைத் தியானஞ்செய்து திருப்பாற்கடலிலே நித்திரை செய்தார். அன்று இராத்திரி விடியும்போது விஷ்ணுவினுடைய உந்திக் கமலத்திலே பிரமதேவன் றோன்றிச் சனகர் முதலாகிய நான்கு புத்திரரைப் பெற்றுப் படைப்புத்தொழில் செய்யும்படி சொன்னான். அப்புத்திரர்கள் பரமேசுரன் றிருவருளால் யோகத்தை யடைந்து பிதாவின் சொல்லை மறுத்துவிட்டபடியால் பிரமன் அதிக கோபங் கொண்டான். அந்தச்சமயம் அவனுடைய புருவ மத்தியிலே நீலகண்டத்தையுடைய சிவபிரானை றோன்றிப் பிரமதேவனது கோபத்தை மாற்றி அனந்தம் உருத்திரரைப் படைத்தார். அவர்கள் மிகுந்த உக்கிரமுடையவர்களாக இருத்தலைப் பிரமதேவன் கண்டு

பயந்து படைப்புத்தொழிலை விட்டுவிட வேண்டுமென்று சிவபிரானை வணங்கிப் பின்னும் பததுப் புதல்வரைப் பெற்றுப் படைப்புத்தொழில் செய்யும்படி நியமித்தான். அப்புதல்வர்களுள்ளே தக்கனென்பவனிடத்திலே நாராயணியாகிய உமாதேவி புத்திரியாகவந்து சதியென்னும் பெயரையடைந்து சிவபெருமானை விவாகஞ் செய்து கொண்டிருந்தாள்.

அதன்மேல் தக்கன் ஒரு யாகஞ்செய்ய நினைந்துச் சகல தேவரையும் வரவழைததான். பரமேசுரனைத் தன்னுடைய மருமகன்றானேயென்று அவமதித்து வரவழைத்தானில்லை. இவ்விதம் தந்தையாகிய தக்கன் யாகஞ் செய்வதை உமாதேவி தெரிந்து அந்த யாகத்தின் சிறப்பைப் பார்த்துவர வேண்டுமென்று சிவபிரானிடத்தில் விடைபெற்றுக்கொண்டு யாகசாலைக்கு வந்தனள். அதுகண்ட தக்கன் தன்னுடைய மகள்தானேயென்று நிந்தித்து உமாதேவிக்கு மரியாதை செய்யாதிருந்து விட்டான். அப்போது உமாதேவிக்குக் கோபம் அதிகரிக்க இந்தப் பாவிக்கு நாம் புத்திரியாயிருத்தல் தகாதென்று நினைததுத் தன்னுடைய திருவுருவை நீக்கிவிட்டு அப்புறஞ் சென்றாள். இவையெல்லாம் நாரதமுனிவராலே சிவபிரான் தெரிந்து மிகச்சினந்து தம்முடைய சடையை நிலத்திலே அறைந்தார். அறைந்த இடத்தினின்றும் வீரபத்திரர் தோன்றிச் சிவபிரான் கட்டளைப்படி யாகசாலைக்கு வந்து அங்குள்ளார்

யாவரையுந் தங்கவாறு தண்டனை செய்து தக்கனுடைய தலையை ஒரு பாணத்தினால் அறுத்தெறிந்து யாகசாலையையும் அழித்து யாகத்தப்பத்தையும் முறித்தெறிந்துவிட்டுக்கோபந்தணிந்து கணங்கள் சூழ்ந்துவரக் கயிலாசத்துக்குச் சென்று சிவபெருமானை வணங்கி வீற்றிருந்தனர்.

---

23. பார்வதி திருவவதாரச் சருக்கம்.

மேலே சொல்லிய தக்கனுடைய யாகசாலை வெந்து சாம்பராய்ப் போகும்படி கோபஞ்செய்து வெறுத்துவிட்ட உமாதேவியானவள் இமயமலை யரசன் தவஞ்செய்து கொண்டிருக்கும் காட்டினிடத்திலுள்ள தடாகத்தின் கரைப்பக்கஞ் சென்று அந்தத் தடாகத்தின் மலர்ந்த தாமரைப்பூவின் மேலே இரண்டு பிள்ளைகளாகத் திருவுருக் கொண்டிருந்தாள். அதைக் கண்டு இமயமலை யரசன் சந்தோஷமுற்று அப்பிள்ளைகளிரண்டையும் எடுத்துத் தன் மனைவியாகிய மேனை என்பவள் கையிலே கொடுத்து ஒரு பிள்ளைக்குக் கங்கை என்றும் ஒரு பிள்ளைக்குப் பார்வதியென்றும் பெயரிட்டு வளர்த்து வந்தான். அதன்மேல் இமயமலைக்கு மைநாகம் என்னும் ஒரு பிள்ளை பிறந்தது. அதுவும் வளர்ந்து இந்திரன் வச்சிராயுதத்துக்குப் பயந்து கடலிலேபோயொளித்துக் கொண்டது. பின்பு இந்திரன் இமயமலை யரசனிடம்

வந்து யாசித்து எங்களுடைய தீவினையெல்லாம் நீங்கும்படிக்குக் கங்கையாகிய புத்திரியைத் தரல்வேண்டு மென்று கேட்டு வாங்கிக்கொண்டு போய்ப் பொன்னுலகத்தில் வைத்துப் பூசித்து நிற்ப, அப்பூசனையைக் கங்கையானவள் மகிழ்ந்து இந்திரன் முதலியோர்கள் பாவங்களைக் கழுவி அங்கேயிருந்தாள். இது நிற்க பார்வதிதேவி பந்து அம்மானை கழங்கு ஊசல் முதலிய விளையாடல்களைச் செய்து பேதைப் பருவங்கடந்து எல்லா அவயவங்களும் மங்கைப் பருவத்துக்குரிய அழகு காட்ட வளர்ந்துவருங் காலத்தில் இமவானும் மேனையும் புத்திரியை நோக்கி மணப்பருவம் வந்துவிட்டதே யென்று இவளுக்குத் தக்க நாயகன் வருஞ் சமயத்தை ஆராய்ந்திருந்தார்கள். அதைப் பார்வதிதேவி குறிப்பாலறிந்து தன் பிதாவை நோக்கிக் கைலாசமலையிலெழுந்தருளியிருக்குஞ் சிவபிரானை என்னுள்ளத்திலே வைத்துத் தவஞ்செய்ய வேண்டுமென்று விடைபெற்றுக் கொண்டு நெருங்கிய ஒரு பூஞ்சோலைக்குள்ளே புகுந்து தவஞ்செய்ய முயன்றுகொண்டிருந்தாள். இது இப்படியிருக்க இனி சிவபிரான் யோகத்திலிருந்த சிறப்பெல்லாம் மனமகிழ்ச்சி உண்டாகச் சொல்லுவோமென்று சூதமுனிவர் மற்ற முனிவர்களுக்கு அருளிச் செய்தார்.

---

24. சிவன் யோகச் சருக்கம்

சனகாதியர் நால்வரும் வந்து வணங்க நெடுங் காலம் பரமேசுரன் யோகத்திலிருந்தார். அப்படியிருக்குங் காலத்திலே சூரபன்மன் முதலிய அசுரர்கள் செய்யும் துன்பம் பொறுக்கமாட்டாமல் தேவர்களுடனே இந்திரன் பிரமதேவனிடத்திலே வந்து சொன்னான். பிரமதேவன் கேட்டு யோசித்துச் சொல்லுவான்: யோகத்திலிருக்குஞ் சிவபெருமான் பருவதராசன் புத்திரியாகிய பார்வதியை விவாகஞ் செய்து ஒரு புத்திரனைப் பெற்றால் அப்புத்திரனால் இந்தத் துன்பம் நீங்கும். ஆதலால் மன்மதனை அழைத்துப் புட்பபாணத்தைச் சிவபிரான்மேலே பிரயோகம் பண்ணும்படி செய்யென்று சொல்ல, அந்தப்படியே இந்திரன் மன்மதனையழைத்துச் சொல்லுதலும், மன்மதன் சகல லோகநாயகராகிய பரமேசுரனை நம்போலியர்கள் வெல்லவல்லரோவென்று மறுத்தான். மீட்டும் இந்திரன் சாம பேத தான தண்டத்தால் மன்மதனை வசப்படுத்திச் சம்மதிக்கும்படி செய்தான். உடனே மன்மதன் கரும்புவில்லும் புட்ப பாணங்களும் எடுத்துக்கொண்டு தென்றலாகிய இரதத்தின் மேலேறிப் பெண்கள் சேனைசூழப் போர்க்கோலங் கொண்டு சிவபிரான் யோகஞ் செய்யுமிடத்துக்குச் சென்று மலைபோலே குவியும்படி அநேக மலர்ப் பாணங்களை யேவினான்.

இது தெரிந்து சிவபிரான் நெற்றிக் கண்ணைத் திறந்து பார்த்த அளவிலே மன்மதன் எரிந்து சாம்பராகி

யிறந்து போனான். இதுகண்ட மன்மதன் மனைவியாகிய இரதி வந்து எரிந்து கிடக்குஞ் சாம்பரிலே புரண்டு பலவாறு புலம்பி அழுது சிவபிரான் திருவருள் புரியா விடில், நானும் இறந்துவிடுவேனென்று வருந்துகிற சமயத்தில் "மன்மதன் வந்துவிடுவான். நீ இறந்து படாதே" என்று ஒரு அசரீரிவாக்கு நிகழ்ந்தது. நிக ழவே, இரதியானவள் யோகத்திலிருக்குஞ் சிவபெரு மான் முன்பு சென்று வணங்கி சுவாமி! கோபந்தணிந்து கிருபை செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க சிவபிரான் திருவருள் சுரந்து மன்மதனை வரும்படி நினைத்தலும், உடனே மன்மதனும் அங்கமில்லாமல் அநங்கனாக எதிரே வந்து சுவாமியை வணங்கி அடியேன் பிழையைப் பொறுத்தருளுக என்று துதித்து நின்றான். இரதி தேவி என்னுடைய நாயகன் அநங்கனாக இருக்கும் குற்றத்தை நீக்க வேண்டுமென்று பிரார்த்தித்தாள். அது கேட்டுப் பரமேசுரன் இரதியே! உனக்கு மட்டும் உருவத்தோடு தோன்றுவான். மற்றவர்களுக்கெல்லாம் அருவமாகவே இருப்பானென்று கட்டளையிட்டு அவ்விரு வரையும் தமதிடத்துக்கனுப்பிவிட்டு யோகத்தை முடித்துத் தம்மைச் சகல கணநாதர்களும் சூழ்ந்து வரக் கயிலாசமலையிலே தமதிருப்பிடத்துக்கு வந்து சேர்ந்தார். இனி பார்வதி தவஞ்செய்த கதையைச் சொல்லுவோம் கேளுங்கள் முனிவர்களே! என்று சூதமுனிவர் சொல்லினர்.

25. பார்வதி தவஞ் செய்த சருக்கம்.

அலைகளெல்லாம் பொன் சொரிகின்ற கங்கை நதிக் கரையின் பக்கத்திலே தேனொழுகாநின்ற பூஞ்சோலைகளினுடைய ஒரு மணற் குன்றினிடத்துப் பன்னசாலை செய்து அச்சாலையின் நடுவில் பதுமாசனத்தின்மேல் விபூதி, உருத்திராக்ஷம் முதலாகிய சிவ சின்னந்தாங்கி ஒரு மயில் வந்திருந்தாற்போலப் பார்வதி வந்திருந்து சிவபிரானைத் தனது திருவுள்ளத்திலிருத்திப்பரமானந்த மேற்படத் தவஞ்செய்து கொண்டிருந்தாள். இதைத் தெரிந்து சிவபெருமான் இடபாரூடராய் எழுந்தருளி வந்து நின்று பார்வதி தவக்கோலத்தைத் தமது நெற்றிக் கண்ணுங் குளிருமபடி பார்த்துப் பலவாறு நினைந்து புன்முறுவல் கொண்டு தமது திருவுருவத்தை மறைத்து ஒரு விருத்த வேதியர் வடிவமாகித் தளர்ந்த நடையுடையும் வளைந்த முதுகும் நரையும் திரையும் உடையவராய் ஒரு தண்டூன்றிக்கொண்டு பார்வதி முன்னே நின்றார். பக்கத்திலே தோழிப் பெண்கள் வேதியரை யுபசரித்து வணங்குஞ் சமயத்தில் பார்வதி விழித்துப் பார்த்துத் தானும் அவரைத் துதித்து வணங்கிச் சுவாமீ! நீர் இந்த விருத்த வடிவத்துடன் இந்த வனத்துக் கெவ்வாறு வந்தீர்? உம்முடைய இருப்பிடம் எது? யாரிடத்துக்குப் போதல் வேண்டுமென்று கேட்க விருத்தராகிய வேதியர் சொல்லுவார் :

பெண்ணே! என்னுடைய மனைவி முன்னொரு காலத்திலே கோபத்தினால் அக்கினிப் பிரவேசமாகிப் போனாள். ஆதலால் இன்னும் ஒரு மனைவியை விரும்பித் தவஞ்செய்து இங்கு வந்தோமென்று தம்முடைய கருத்தைச் சொல்லினர். பார்வதி கோபங்கொண்டு நீர் யௌவனமுடையார் சொல்லும் வார்த்தையைச் சொல்லுதல் முறையோவென்று கூறுதலும், பெண்ணே! நான் விருத்தனானாலும் மன்மதனை வெல்லும் வலிமையுடையே னென்று வேதியர் பார்வதி கேட்டதற்கெல்லாம் மறு மொழி கொடுத்தனர். சுவாமீ! நான் கங்காநதியைத் தரித்த சிவபிரானையே மணஞ்செய்ய நினைத்திருக்கிறே னென்று பார்வதி கூறினாள். பெண்ணே! தாய் தந்தை யில்லாதவனாய்ச் சாம்பர் பூசித் தோலை மூடித் திரியும் பித்தனோ உனக்கு நாயகனென்று வேதியர் சொல்லினர். அதுகேட்ட பார்வதி கோபங்கொண்டு சிவ நிந்தை செய்கிற இவனை இவ்விடத்தைவிட்டு அப்பாலே துரத்து மென்று சேடிப்பெண்களுக்கு உத்தரவு கொடுத்துவிட் டுப் பன்னகசாலைக்குள்ளே சென்றாள். அதுகேட்ட வுடனே வேதியர் ஆகிய சிவபெருமான் விருத்த வடி வத்தை மறைத்துக் கோடி மன்மதர் ஒன்றாகத் திரண் டெழுந்தாற்போலுந் தமது இயற்கைத் திருவுருவோடு வந்து எதிரே நிற்றலும் பார்வதி கண்டு தரிசித்துச் சரீரமெல்லாம் புளகங்கொள்ள ஆனந்தக் கண்ணீர் சொரிய நாணத்தோடு தலை கவிழ்ந்து நின்று சுவாமீ!

சத்தரிஷிகளையும் இமயமலை அரசனிடந் தூதாக அனுப்பி என்னை விவாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்று சொல்லித் தன் தவத்தை முடித்து இமயமலைக்குச் சென்றாள். சிவபிரானும் மனமகிழ்ந்து இடபவாகனத்தி லேறிக் கொண்டு திருக்கயிலாசமலை போய்ச் சேர்ந்தார்.

---

26 பார்வதி திருக்கலியாணச் சருக்கம்

அகத்திய முனிவர் முதலாகச் சொல்லப்பட்ட சத்தரிஷிகளும் இமயமலையினிடத்து வந்துசேர்ந்தார்கள். அம்முனிவர்களை இமயமலையரசன் கண்டு வணங்கிப் பூஜைசெய்து நீங்கள் இங்குவந்தகாரணம் யாதென்று கேட்க, சத்தரிஷிகள் சொல்லுவார்கள்: சிவபெருமான் யோகத்திலிருந்து மன்மதனை யெரித்தபின்பு நாரதர் தும்புரு நின்று வீணை வாசிக்கத் திருக்கயிலாசமலையி லெழுந்தருளியிருக்குங் காலத்திலே சகல தேவர்களும் வந்து வணங்கி, சுவாமீ! உம்முடைய திருவடியே எங்களுக்குக் காவல். சூரன் செய்யுந்துன்பம் பொறுக்க முடியவில்லையென்று விண்ணப்பம் செய்தார்கள். உடனே கயிலாசபதி திருவருள் செய்து எங்களை நோக்கிப் பார்வதியை விவாகஞ்செய்ய நினைத்திருக்கின்றோம். நீங்கள்போய் இமவானுக்குத் தெரிவித்து வாருங்களென்று விடைகொடுக்க இங்கே வந்தோமென்றார்கள். இச்செய்தி கேட்டு இமவான் புளகாங்கிதங் கொண்டு மிகமகிழ்ச்சியடைந்து சருவலோக நாயகராகிய

சிவபெருமான் என்னுடைய புத்திரியை விவாகஞ்செய்ய என்னதவஞ் செய்தேனென்று சொல்லிச் சம்மதித்து அம்முனிவர்களைக் கயிலாசமலைக் கனுப்பிவிட்டு இமய மலை முழுதும் பொன்னாலும், மணியாலுங் கோடிசூரிய ருதித்தாற்போல அலங்காரஞ் செய்வித்தான். இந்தச் செய்தியைத் தேவப் பெண்களும் ரிஷிபத்தினிகளுங் கேட்டுச் சந்தோஷித்து மேனையிடத்துவந்து சோபனம் வினவிப் பார்வதியை நவரத்னங்களா லிழைக்கப்பட்ட ஆபரணங்கள் பூட்டி அலங்காரஞ் செய்தார்கள்.

கயிலாசத்துக்குச் சென்ற சத்தரிஷிகளும் சிவ பிரான் சந்நிதியிற் சென்று வணங்கி இமவான் புத்திரி யைக்கொடுக்கச் சம்மதித்தானென்று விண்ணப்பஞ் செய்தலும் சிவபெருமான் மனமகிழ்ந்து மணக்கோலந் தரித்துக்கொண்டிருந்தார். உடனே அரிபிரமேந்திராதி யர்கள் திக்குப்பாலகர் முதலிய சகலதேவர்களும் முனி வர்களும் கணநாதர்களும் பூதசேனைகளும் எண்ணிறந்த வர்கள் வந்து நெருங்கிச் சூழ்ந்தார்கள். அதன்மேல் நந்திதேவர் சிவபிரான் திருமுன்னே சென்று இமயத் துக்கெழுந்தருளும்படி பிரார்த்திக்கச்சிவபிரான் திருவுள மகிழ்ந்து ரிஷபவாகனத்தி லேறிச்சென்று சகலவாத்தி யங்களுங் கடல்போல முழங்க இமயமலைச்சாரல்போய்ச் சேர்ந்தனர்.

அதுகண்டு இமவான் எதிர்கொண்டு வணங்கி மணப் பந்தருக்கு அழைத்துக்கொண்டு வந்தான். அப்போது

எல்லாவுலகத்திலுமுள்ள சகல தேவர்களும் மணக் கோலந்தரிசிக்க வந்த காரணத்தால், உத்தரபூமி தாழ்ந் தும் தெக்ஷணபூமி உயர்ந்தும் இருந்ததைக் கண்டு பரமே சுரன், அகத்தியமுனிவரை யழைத்து வடபூமியுந் தென் பூமியுஞ் சமமாகும் பொருட்டுத தென்றிசைக்குப் போய்ப பொதியமலையின் கண்ணே நீ யிருத்தல் வேண் டும் உனக்கு இந்த மணக்கோலத்தைப் பொதியமலைச் சாரலிலிருக்கும் பாவநாசத்திலே சித்திரை மாதப்பிறப் புத்தினத்திலே வந்து காட்சி கொடுப்போமென்று உத்தரவுகொடுக்க அகத்தியமுனிவர் விடைபெற்று வரும் போது அடியேனுக்கு ஒரு தீர்த்தம் வேண்டுமென்று தாமிரபன்னி நதியை வாங்கிக்கொண்டு தென்றலங் குன்றாகிய தமிழ்வரையை நோக்கி நடந்தார். அப்பால் இமவான் சுவாமியைத் திருமணவேதிகையி லெழுந்தரு ளச்செய்து துந்துபி முதலிய வாத்தியமுழங்கத் தேவர் கள் புட்பமாரிபொழிய வேதவிதிப்படி தன்புத்திரியாகிய பார்வதியை விவாகஞ் செய்துகொடுததான். உடனே சிவபெருமான் பார்வதி தேவியுடன் ரிஷபவாகனத்தி லெழுந்தருளிச் சகல கணங்களுஞ்சூழக் கயிலாசத்துக் கெழுந்தருளினார்.

---

27. அகத்தியர் வரவுரைத்த சருக்கம்

இமயமலையினின்றும் அகததிய முனிவர் புறப் பட்டு வரும்போது அண்ட வெளியெல்லாம் அடைத்து

வளர்கின்ற கிரவுஞ்ச மலையைக் கண்டு அங்கே வழி தெரியவொட்டாமல் இருளைப் பரப்பி நின்ற ஒரு அசுரனைத் தமது கையிலுள்ள தண்டத்தினாலே கெடுத்து இந்த மலை வடிவமாகக்கிடவென்று சபித்துப் பின்பு முருகக்கடவுள் வந்து உன்னை வேலாயுதங் கொண்டு பிளப்பார் என்று சொல்லிக் கோபந்தணிந்து அப்பால் வரும்போது சூரியனுக்கும் நடக்கும் வழியை மாற்றி மேருவைப்போலும் வளர்கின்ற விந்தமலையைக் கண்டு கையினாலே பூமிக்குள்ளே அழுத்தி நாம் வருமளவும் வெளி வராதேயென்று சொல்லிவிட்டு அப்பாற் சென்று வாதாவி, வில்வலன் என்று சொல்லப்படும் இருவரிருக்கும் பூஞ்சோலையினிடத்து வருதலும் அது தெரிந்து வில்வலன் ஒரு தவவேடங்கொண்டு எதிர் வந்து வணங்கி, சுவாமி! அடியேனுடைய பன்னசாலைக் கெழுந்தருள வேண்டுமென்று அழைத்துக் கொண்டு போய் இன்று அடியேனுடைய பிதிர்த்தினம் ஆதலாலே தேவரீர் மாறாது அமுது செய்து போதல் வேண்டு மென்று கூற அகத்திய முனிவர் அதற்கு நல்லதென்று சம்மதித்தார்.

உடனே வில்வலன் வாதாவியை ஆடாக வரும்படி செய்து அந்த ஆட்டையறுத்துக் கறி சமைத்து வைத்து அன்னமுதலியவற்றோடு சேர்த்து அகத்திய முனிவருக்குப் போசனஞ் செய்வித்தான். அம்முனிவர் இது ஒன்றையும் அறிந்தாரில்லை. போசனமுடிந்தவுடன்

வில்வலன், வாதாவியென்று அழைத்தான். அழைத்த உடனே, முனிவருடைய வயிற்றிலே ஆட்டினுருக் கொண்டு வாதாவி முட்டுதலும் முனிவர் ஞானத்திலே எல்லாந்தெரிந்து கையைக் கொண்டு தமது உந்தியைத் தடவுதலும் வாதாவி வயிற்றினுள்ளேயெரிந்து சாம்ப ராயினன். பின்பு வில்வலனைக் கோபக்கனல் சிந்த விழித்துப் பார்த்தலும் அவனும் எரிந்து சாம்பராயி னன். ஆனவுடனே அவ்விடத்தை விட்டுச்சென்று அநேக மலைகளைக் கடந்து சையமலையினுச்சியிலே வந்து சேர்ந்து கமண்டலத்தை யோரிடத்திலே வைத்துத் தமது நியதிகளை முடித்துக் கொண்டிருந்தார். அந்தச் சமயத்திலே விநாயகக் கடவுள் ஒரு காகத்தின் வடி வெடுத்து வந்து கமண்டலத்தைக் கீழே கவிழ்த்தலும் அகத்திய முனிவர் கோபங்கொண்டு காகத்தையெதிர்ந்து நோக்கினர். உடனே காகவுருவை மறைத்து விநாயகக் கடவுள் தமது சொரூபததோடு எதிர் நிற்றலும், அகத்திய முனிவர் வணங்கித் துதித்துச் "சுவாமி! இங்கெழுந்தருளியது என்ன காரணம்" என்று கேட்க விநாயகர் சொல்லுவார்: இந்திரன் செய்த நந்தவனத் துக்குத் தண்ணீரில்லாமல் எம்மை வேண்டினன். அதற் காக வந்து கமண்டலத்தைக் கவிழ்த்தோம்; நீர் வருந்த வேண்டாமென்று கூறி மறைந்தருளினர்.

காகத்தினலே கவிழ்க்கப்பட்ட ஜலம் காவிரி நதி யாகச் சென்றது. தன்னுடைய கலையொன்றினலே

காவிரி நதி வரவிடுத்த தாமிரைபன்னி நதி தங்கிய கமண்டலத்தை அகத்திய முனிவர் கையிலெடுத்துக் கொண்டு சென்று திரிகூடமென்னுந் திருக்குற்றால மலையைச் சேர்ந்து அம்மலைச் சாரலிலுள்ள விஷ்ணு மூர்த்தியைத் தரிசிக்கப் புகும்போது அங்குள்ள வைண வர்கள் கோபங் கொண்டு முனிவரைத் துரத்துதலும் உடனே வெளியில் வந்து வைணவ வேடந் தரித்துக் கொண்டு கோயிலுள்ளே சென்று விஷ்ணுமூர்த்தி யினுடைய முடியிலே கையை வைத்து அமிழ்த்தி இலிங்க வடிவமாக்கித் தரிசித்துவிட்டு அப்புறஞ்சென்று போய்க் கருணாகர நகரத்தைக் கண்டு சென்று விக்கிரம சிங்கபுரத்தைச் சூழ்ந்த சோலை, வயல், தடாகமுதலிய பல சிங்கார வளங்களையுங் கண்டு சென்று வேததீர்த்தத்தை யடைந்து ஸ்நானஞ்செய்து பாவநாசத்திலே முக்காள நிழலிலே முளைத்த வயிராச லிங்கத்தைத் தரிசித்துத் தோத்திரஞ்செய்து வணங்கித் திருவருள்பெற்றுச் சகல வளங்களும் நிறைந்த பொதியமலையினுச்சியிற் சென்று பன்னசாலை செய்து அங்குள்ள முனிவர் வணங்க எழுந் தருளியிருந்தனர். அதன்மேல் வட பூமியுந் தென் பூமியுஞ் சமமாயிருந்தன. இதுகாறும் அகத்திய முனிவர் பொதியமலைக்கு வந்த சரித்திரஞ் சொன்னோம்: இனித் திருமணக்கோலமுற்றுச் சிவபிரானெழுந்தருளிய சரித திரத்தைச் சொல்லுவோம் என்று சூதமுனிவர் மற்றை முனிவர்களுக்குச் சொல்லியருளினர்.

28. திருமணக் கோலக் காட்சி தந்த சருக்கம்.

சந்தனவிருக்ஷமுஞ் செந்தமிழும் வளராநின்ற பொதியமலையின் கண்ணே, அகத்தியமுனிவர் நீங்காது சிவபிரான திருமணக்கோலங் காண்பது என்றைக்கு என்று நினைந்திருக்குஞ்சமயத்திலே கயிலாசத்தில் முன் சொல்லிய திருவாக்கின்படி சித்திரை மாதப்பிறப்புத் தினத்திலே சிவபிரான் தமது திருமுடிமேலே சந்திரன் தவஞ்செய்து வந்திருத்தல் தெரிந்து சூரியனுந் தவஞ் செய்து வந்திருந்தாற்போல நவமணிகளாற் செய்யப் ப்பட்ட மகுடம் பிரகாசிக்கவும் திரிபுண்டரமாக விபூதி விளங்கும் நெற்றியிலே பட்டம் இலங்கவும் இரண்டு பக்கத்திலுமுள்ள காதுகளிலே குண்டலங்கள் பிரகாசிக் கவும் தோள்களிலே வாகுவலயங்கள் காந்தியைவீசவும் நீலகண்டத்திலே கண்டசரம் விளங்கித் தோனறவும் மார்பிலே முத்துமாலையும் பதக்கமும் வீரசன்னமும் பிரகாசிக்கவும் வயிற்றிலே உதரபந்தனம் விளங்கவும் புலித்தோலாடைகட்டிய திருவரையிலே பீதாம்பரங்கள் தரித்து விளங்கவும் திருவடிகளிலே வீரக்கழல் முழங்கித் தோன்றவும் சருவாபரணங்களால் அலங்காரஞ் செய்யப் பட்டு பார்வதி ஒருபாகத்திலேயிருக்கவும் அரம்பை திலோத்தமை சாமரம் வீசவும் குண்டோதரன் குடை பிடிக்கவும், விஷ்ணு, பிரமன், இந்திரன், சூரியன், சந்திரன், அக்கினி, வருணன், வாயு முதலானவர்கள் அவரவர்களுக்குரிய பணிவிடைகளைச் செய்துவரவும்

துந்துபி முதலிய வாத்தியங்கள் முழங்கவும் தும்புரு நாரதர் இசைபாடவும், சகலவேதங்களொருபுறம் முழங்கவும், ரிஷபவாகனத்தி லெழுந்தருளிப் பொதிய மலைச்சாரலிலுள்ள பாவநாசத்திலே வந்து திருமணக் கோலக்காட்சி தந்தருள அகத்தியமுனிவர் கண்கள் குளிரத் தரிசித்து உரோமஞ்சிலிர்ப்ப உரைதடுமாறத் தோத்திரஞ்செய்து பரவசராகி வணங்கி சுவாமீ! அடி யேனுக்குக் காட்டிய திருமணக்கோலக்காட்சியை வரு டந்தோறுஞ் சித்திரை மாதப்பிறப்பிலே காண்பித்து அதனைத் தெரிசித்தவர்களுடைய பாவங்களைப் போக்கி யருள வேண்டுமென்று வரங்கேட்க, சிவபிரான் அவ் வாறே வரங்கொடுத்தருளி அகத்தியமுனிவரைப் பார்த் துப் பொதியமலை தெக்ஷண கயிலாசமாகையால் நீர் இம்மலையைவிட்டு நீங்காம லெப்போதும் இருததல் வேண்டு மென்று தாமிரபன்னி நதியை இம்மலையுச்சி யினின்றும் வர விட்டு விடவேண்டு மென்றுங் கட்டளை யிட்டு வயிராசலிங்கத்தினுள்ளே மறைந்தெழுந்தருளி யிருந்தனர். நந்திதேவர் முதலாகிய ஆவரணதேவதை களும் அவரவர்களுக்குரிய தானததிலே மறைந்திருந் தனர்.

---

29. தாமிர பன்னிச் சருக்கம்

தமிழ் முனிவராகிய அகத்தியர் பரமேசுரன் ஆக்கினைப்படி பொதியமலையினுச்சியிலே, தமது

கமண்டலத்திலுள்ள தாமிரபன்னி நதியைக் கவிழ்த்தலும் அந்த நதி மூன்றாகப் பிரிந்தது. அவைகளுள் ஒரு நதி நாரத தீர்த்தத்திலே வந்து கலந்து அம்மலையிலுள்ள பல அருவிகளிலும் தோய்ந்து கிழக்கே நோக்கிவந்து வயிராச க்ஷேத்திரமாகிய பாவநாசத்தையடைந்து உத்திரவாகினியாகி அங்கு நின்றும் மூன்று பிரிவாகப் பிரிந்து வயிராசலிங்கத்தை வணங்கித் திரும்பி ஆங்கிர நதியையும் வேத தீர்த்தத்தையும் வந்து கலந்து உத்ரவாகினியினின்றுங் கீழ்த்திசைமுகமாகச் சென்ற இரண்டு நதியுடனும் திரும்ப வந்து சேர்ந்து பின்பு மணிமுததா நதியோடு வந்து கலந்து மீண்டு காசிப முனிவர் தபோவனத்தையடைந்து கயேந்திர மோக்ஷ தடாகங்களைச் சேர்ந்து அப்பாற் சென்று கடனா நதியும் பாதலவாகினியாகிய கம்பாநதியுந் தன்னோடு கலப்பச் சித்திரா நதியுடன் சேர்ந்து சமுத்திரம் போய்ச் சேர்ந்தது. இந்த நதிதான செந்தமிழ் நாடாகிய பாண்டி நாட்டிலே பரவித் தாமிரபன்னி நதியென்று பெயர் பெற்றது.

அகத்திய முனிவர் கமண்டலத்தைக் கவிழ்க்கும் போது பிரிந்த மற்றை இரண்டு நதிகளில் ஒரு நதி மேற்றிசைவாகினியாகிய அனந்தசயன க்ஷேத்திரத்திடை வியாபித்துத் திருப்பாற்கடலைப் போய்ச் சேர்ந்தது. மற்றொரு நதியானது உத்தரவாகினியாகி விநாயகக் கடவுள், காக ரூபங்கொண்டு முனிவர் கமண்டலத்தைக்

கழிக்கும்போது தாமிரபன்னியின் ஒரு கலையாகப் பிரிந்த காவிரி நதி தன் சகோதரியென்றெண்ணி அதனுடன் கலந்து சென்றது. கங்கா நதியுந் தன்னிடத்திலே வந்து மூழ்கினவர் பாவங்களை யெல்லாம் வருடந்தோறும் மார்கழிமாதம் இந்தத் தாமிரபன்னி நதியிலே வந்து மூழ்கி நீங்கச் செய்யும்; அன்றியும் கணக்கில்லாத பாவங்கள் செய்த பிராமணனொருவனும் வணிகனொருவனும் வந்து பாவநாசர் சந்நிதி முன்னேயுள்ள தாமிரபன்னி நதியிலே மூழ்கி அப்பாவங்களைப் போக்கினார்கள். இன்னும் கார்த்திகை மாதம், மார்கழி மாதம், தை மாதம் ஆகிய மூன்று மாதங்களிலும் வந்து மூழ்கினோருடைய எப்படிப்பட்ட பாவங்களையும் போக்கும். இந்த அற்புதங்களையுடைய தாமிரபன்னி நதியின் பெருமையைத் தெரிந்தவாறு சுருக்கிச் சொன்னோம். இனி அளவுகடந்த பாதகஞ் செய்த சுந்தரன் சரித்திரத்தைச் சொல்லுவோமென்று சூதமுனிவர் மற்ற முனிவர்களுக்குச் சொல்லியருளினர்.

---

30. சுந்தரன் பாவமோசனச் சருக்கம்.

மேகம் மழைபொழியும் வளங்குறையாத கவுடதேசத்திலே வேதமுழக்கம் நீங்காத காந்தமாபுரியென்னும் நகரிலே செல்வம் நிறைந்த வற்சகோத்திரத்தில் வந்த அரிமித்திரன் என்னும் பிராமணன் அன்னதானஞ் செய்து கொண்டிருந்தான். இங்ஙனம் அன்னதானஞ்

செய்து நல்ல நியமங்களைச் செய்துவரும் நாளையில் சுந்தரனென்னும் ஒரு புத்திரன் பிறந்தான். அப் புத்திரனும் வேத முதலாகிய கலைகளெல்லாம் பயின்று பின்பு பிதாவைப்போல அன்னதான முதலிய தருமங்கள் செய்துவந்தான்; அவன் ஒருநாள் தூண்டிலொன்றை யெடுத்துத் தடாகத்தின்கண்ணே சென்று அநேக மீன்களைப் பிடித்துக் கொண்டு ஒரு மரத்து நிழலில் வந்திருந்தான். இருக்கும்போது அவ்விடத்திலே வந்த சாரணரோடு கலந்து மகிழ்ந்து பேசிக் காமமேலீட்டால் ஒரு நாடகக் கணிகையுடன் கலந்து தன்னியமங்களை மறந்து மதுபானஞ்செய்து திரிந்து மிகுந்த திரவியத்தைச் செலவழித்து விட்டான். இது தெரிந்த பிதாவானவன் தன்னிடத்திலுள்ள திரவியங்களையெல்லாம் பூமிக்குள்ளே மறைத்துவைத்தான். பின்னொரு நாள் மதுபானஞ்செய்த மயக்கத்தினாலே சுந்தரன் தாசி வீட்டுக்குச் சென்றான். அவள் திரவியமில்லாது வந்த இவனை வெறுத்துக் கோபிக்கவும் உடனே வீட்டுக்கு வந்து திரவியங்களொன்றையுங் காணாமல் அதிக கோபங் கொண்டு தன் தகப்பனை வாளாயுதத்தால் இரண்டு துண்டாக வெட்டிக் காமவெறியால் தன் தாயையும் புணருதற்குத் தலைப்பட்டான்.

அது தெரிந்த தாயானவள் தன்னுயிரைத் தானே நாக்கைப் பிடுங்கி மரணஞ் செய்துகொண்டாள். அதன் மேல் மதுமயக்கந் தீரக் காம மயக்கமுந் தீர்ந்து மனம்

கலங்கி அந்தோ என்ன பாதகஞ் செய்தோமென்று வருந்தி விடிவதற்கு முன்னமே சுற்றத்தாரும் பிறரும் அறியாவிதமாகத தன் மனைக்குள்ளே இருவரையுந் தகனஞ்செய்து செய்யவேண்டிய நியதிகளை முடித்து உடனே நகரத்துக்கு வெளியே புறப்பட்டுப்போனான். போகும்போது பிரமகத்திதோஷம் வந்து சுந்தரனைப் பிடித்துத தள்ளியலைப்ப மிகவும் வாடி இப் பாவம் எஙகேபோனாற் றொலையுமென்று தீர்த்தயாத்திரை செய்ய நினைத்துச் சப்புததீவிலுள்ள புண்ணியத் தீர்த் தங்களிலெல்லாம் ஸ்நானஞ் செய்துந் தீராமல் பாவநாசத தைச் சேர்ந்த பஞ்சக்குரோசத்தெல்லையைச் சேர்தலும் சுந்தரனைப்பிடித்த இரண்டு பிரமகத்தி தோஷமும் வெந்து சாம்பராய்ப் போயின. இந்த அற்புதத்தைச் சுந்தரன் கண்டு சந்தோஷித்து நிற்கும்போது பாவநாசத் திலே சென்றால், சகல பாவமும் நீங்கும் மோக்ஷமுங் கிடைக்குமென்று ஒரு அசரீரி சொல்லக் கேட்டு அந்தப் படியே மார்கழி மாதத்து அமாவாசைத் தினத்திலே பாவநாசத்தலததில் வந்து வேத தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்து சந்நிதியிலுள்ள சிவகங்கையிலுந் தீர்த்தமாடிச் சந்நிதி முன்பு தாமிரபன்னி நதியிலுமூழ்கி முக்களா லிங்கரைத் தோத்திரஞ்செய்து தன் பாவங்களை யெல்லா மொழித்து நின்றான். உடனே சிவபெருமான் இடபா ரூடராயெழுந்தருளி வந்து சுந்தரனுக்குக் காட்சி கொடுத் தருளத் தரிசித்துப் பேரானந்தமடைந்து பரவசனாகி

வேத மந்திரங்களாலே தோத்திரஞ்செய்து சுவாமீ! அடியேனுடைய பிதா மாதாவுக்குப் பரகதி கொடுத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தான். சிவபிரான் அவ்வாறே கேட்ட வரங்களைக் கொடுத்து, "சுந்தரனே! பஞ்சாக்ஷர செபஞ்செய்து பல தவங்களைச் செய்து சில நாட்சென்று நம்முடைய பதவிக்கு வந்து வாழ்க" என்று சொல்லி வயிராசலிங்கத்துள் மறைந்தருளினார். உடனே சுந்தரனுடைய பிதாமாதா ஆகிய இருவரும் தெய்வ விமானத்திலேறிச் சுந்தரன் முன்பு வந்து நின்று வாழ்த்துரை சொல்லிக் கயிலாசத்தை அடைந்தனர். சுந்தரனுஞ் சிவபிரான் கட்டளைப்படியே தவம் புரிந்து முக்களா மூர்த்தியைப் பணிந்து சிலநாள் சென்று சிவபதம் பெற்றான். சுந்தரன் பாவமோசனத்தைச் சொன்னோம். இனி வணிகன் பாவமோசனத்தைச் சொல்வோம். முனிவர்களே! கேளுங்களென்று சூதமுனிவர் சொல்லியருளினர்.

---

31. வணிகன் பாவமோசனச் சருக்கம்.

கருணாகரபாண்டியன் புத்திரனாகிய இந்திரத்துய்மினன் செங்கோல்செலுத்தி அரசாட்சிசெய்து முக்களா மூர்த்தி திருவருளால் அத்திரிமுனிவர் வாக்கியப்படியே மனவயிராக்கியத்தாற் பஞ்சப்புலன்களையும் ஒடுக்கி உலக வாழ்வை வெறுத்துத் தன் புத்திரர் பன்னிருவருக்கும்

கிரீடந்தரித்துச் செங்கோல் செலுத்திவரச்செய்து விட்டுத் தாமிரபன்னி நதியிலே தினந்தோறுமுழ்கி வயிராச லிங்கப்பெருமானைத் தரிசித்துத் திருவருளை பெற்றுப் பின்பு பரலோகத்தை யடைந்தான். அதன்மேல் பன்னிருமைந்தருக்குள் ஆறுவது மைந்தனாகிய விமலபாண்டியனிடத்திலே சித்திரசேனன் என்றொரு மைந்தன் பிறந்து உலகத்தைத தருமசாததிரத்திற் சொல்லிய முறைதவறாது பாதுகாத்துக்கொண்டுவந்தான்; சிலநாட் சென்று தீவினைப்பயனால் சமணசமயத்திலே புகுந்து நித்தியகன்ம முதலிய அனுட்டானங்களை யெல்லா மறந்து பொருளாசை யதிகரிப்பத் தன்னுடைய நகரத்திலுள்ள குடிகளையெலலாந் துன்பஞ்செய்து திரவிய முழுவதும் அபகரித்தான். இவனுடைய அநீதியாகிய கொடுங்கோலுக்குப் பயந்து சனங்களெல்லாம் வேறு நாட்டைததேடிக் குடி போனார்கள். அப்படிப்போனவர்களிலொருவனாகிய விட்டுணுகுத்தனென்னும் வணிகன் தேசாந்தரியாக மனைவிமக்களுடனே யலைந்தான். இப்படி யலைந்து நெடுநாள் சென்றபின் தன் மனைவியோடு தானும் ஆயுள்முடிய மரணமடைந்தான். அவன் புத்திரனாகிய அரிகுத்தன் தனக்குமுன் பிறந்த தமக்கையுடனே ஊர்தோறும் பிச்சையேற்று வயிறுவளர்த்துச் சென்று சோழதேசத்திலே திரியும்போது ஒருநாள் அங்குள்ள யானைப்படை நெருக்கினாலே தன் தமக்கையைப் பிரிந்து விட்டான். தமக்கையுந் தன் தம்பியைததேடி யெங்குங்

காணுமல் பிரிந்துபோனுள்; இவ்விதம் ஒருவரையொரு வர் தேடித்தேடிப் பரிதவித்துப் பற்பல வூர்தோறுஞ் சஞ்சரித்துத் திரிந்தார்கள்.

நெடுங்காலஞ்சென்று முத்திநகரங்களு ளொன்ருகிய காசி க்ஷேத்திரத்தை ஒருவரையொருவர் அறியாது சென்று சிலநாள் வசிக்கும்போது ஒருநாள் ஒரு மடத்திலே இருவரும் வந்து சந்தித்திருந்து, நீண்டகாலமானதாலே தங்களைத் தெரியாமல் காமம் அதிகரித்து ஆசையுற்றுப் புணர்ச்சிசெய்து களிப்புற்று நாமிருவருமினி நாயகனும் நாயகியுமாக மணந்துகொள்வோமென்று பேசி ஒருவரையொருவர் இனம் விசாரிக்கத் தொடங்கும்போது தங்களுண்மை வெளிப்படுதலும், அரிகுத்தன் மனங்கலங்கி ஐயையோ என்ன நினைந்து என்னபாதகஞ் செய்தோமென்று பெருமூச்சுவிட்டு நிலைகுலைந்து பலவாறு பிதற்றி அங்குள்ள முத்திமண்டபத்தையடைந்து நான்குவேதங்களு முணர்ந்த முனிவர்களை வணங்கித் தஙகளுக்கு வந்த குறையையெடுத்துச் சொல்லி இந்தப்பாவம் நீங்குவதற்குப் பிராயச்சித்தம் ஏதாவது சொல்லவேண்டுமென்று பிரார்த்தித்தலும், அம் முனிவர்கள் சொல்லுவார்கள்: இக்கொடியபாதகம் தீர்த்தயாத்திரை செய்தாலொழியத் தீராது. ஆதலால் நீங்கள் இருவரும் கருநிறமுள்ள வஸ்திரங் கட்டிக்கொண்டு புண்ணியநதிகளிலெல்லாஞ் சென்று ஸ்நானஞ் செய்ய வேண்டும். எந்தநதியிலே கறுப்புநிறமாறி வெள்ளை

நிறம் வஸ்திரத்திலே வருமோ அந்தநதியிலே உங்கள் பாவமுந் தீருமென்று சொன்னார்கள். உடனே அந்த இருவரும கறுப்புவஸ்திரந் தரிததுக்கொண்டு தீர்த்த யாத்திரை செய்யத் தொடங்கிக் கங்காநதி, யமுனை, சரசுவதி, குகு, துங்கபததிரி, சுக்கிலை, பற்குனி, கிருட்டிணை சரயு, பம்பை, தமசை, கௌசிகை, நாசினி, கண்டகை, தாபினி, சருதிவிந்து முதலிய அநேக புண்ணியநதிகளிலே தீர்த்தமாடியும் பாவநீங்காமல அப்பாற்சென்று வேததீர்த்தஞ் சூழப்பட்ட பாவநாசததை யடைந்து சந்நிதியிலுள்ள தாமிரபன்னி நதியிலே மூழ்கி யெழுந்தார்கள். எழுந்தவுடனே வஸ்திரங் கறுநிறமாறி வெண்ணிறமுற்றிருந்ததைப்பார்த்து மனமகிழ்ந்து தங்கள் பாவமும் போயதென்று பரவசமடைந்து அங்குள்ளாரெலலாம் பார்தது அதிசயிப்ப ஆனந்தவாரியிலே தோய்ந்து தாமிரபன்னி நதியைத துதித்து வணங்கிநின்றார்கள்.

அப்போது பாவநாசத்திலெழுந்தருளிய சிவபெருமான் கருணைகூர்ந்து இடபாரூடராயெழுந்தருளித் தரிசனங்கொடுத்தனர். உடனே அவ்விருவரும் வணங்கிச் சரீரமெஙகும் புளகாங்கிதங்கொள்ளத் துதிதது சுவாமி! எஙகளுக்கு இந்தச் சரீரம் இருநததனாலன்றோ கொடிய பாதகஞ்செய்து வருத்தமுற்றோம். ஆதலால் இன்னமும் ஒரு சரீரத்தையெடுததலையாத வரங் கொடுத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தலும்,

சிவபிரான் கருணை மிகுதியினாலே அவ்வரத்தைத் தந்தருளி மறைந்து சென்றார். அதன்மேல் இருவரும் காவி வஸ்திரந் தரித்துக்கொண்டு தினந்தோறும் தாமிரபன்னி நதியிலே ஸ்நானஞ் செய்து முக்களா முதல்வனைத் தரிசித்திருந்து சில நாள் சென்றபின் பரகதியடைந்தார்கள். எவ்வளவு பாவஞ் செய்தவர்களாய் இருந்தாலும் தாமிரபன்னியிலே ஒருதரம் ஸ்நானஞ் செய்வாராகில் அப்போதே யெல்லாப் பாவங்களும் ஒழிந்துவிடும். இந்நதியின் பெருமையை யாராலே சொல்லமுடியும்; இனித் திருவாதிரை விரத மான்மியத்தைச் சொல்லுகிறேன் கேளுங்களென்று சூதமுனிவர் மற்றை முனிவர்களுக்குக் கூறினார்.

---

32. திருவாதிரை விரதச் சருக்கம்

பூர்வகாலத்திலே உமாதேவியார் தமக்குப் பரமேசுரன் நாயகனாவதற்குச் செய்த திருவாதிரை விரதத்தைப் பாண்டிய ராசன் பத்தினி செய்து முடித்தாள். அவ்விரதஞ் செய்யுமுறையைச் சொல்லுவோம். மார்கழி மாதத்திலே சுக்கிலபக்ஷத்தில் வருஞ் சதைய நக்ஷத்திரத்தன்று காலையிலே ஸ்நானஞ்செய்து நித்தியகன்ம முடித்து விநாயகரைப் பூசித்துப் பின்பு மனையாளோடு கூடிய ஒரு பிராமணனை உமாமகேசுரனாகப் பாவித்துத் தம்பதி பூஜை செய்து அன்னம், வஸ்திரம், ஆபரணம்,

மாலை, தாம்பூலம் ஆகிய தக்ஷிணை கொடுத்து மகிழ்வித்து வணங்கியனுப்பிவிட்டு அப்பால் தன் சுற்றத்தாரோடும் போசனஞ் செய்து தரையிலே தனியே சயனித்துச் சிவநாமங்கள் பலவற்றையுமுச்சரித்து வணங்கித் தன் நாயகன் பூரண ஆயுளெய்தியிருக்க வேண்டுமென்று மனைவி தியானித்துகொண்டிருந்து பின்பு திருவாதிரை வந்த நாளிற் சூரியனுதிக்குமுன்னெழுந்து ஸ்நானஞ் செய்து நடராசரைத் தரிசனஞ்செய்து வந்து விரதத்தை முடிப்பதற்குத் தன்னாயகனிடந் தெரிவித்துப் பூசாமண்டபத்தைப் பட்டினாலும் வாழை கரும்பினாலும் அலங்காரஞ்செய்து வேதிகையிலே பரப்பிய பச்சரிசியிலே எட்டிதழோடு கூடிய தாமரைப்பூவையெழுதி அதன்மேலே புதிய வஸ்திரத்தை மடித்து வைத்துப் பெரியோர்கள் சூழ இருந்து சங்கற்பஞ்செய்து ஆதார சத்தி முதலிய ஆசனங் கற்பித்துப் பொன்னாலே உமாமகேசுர வடிவமாகச் செய்த பிரதிமைகளைப் பஞ்ச கௌவிய முதலாகிய அபிடேகஞ் செய்வித்து மடித்து வைத்த வஸ்திரத்திலே வைத்து ஆவாகனுதி சோடசோவுபசாரத்தாலே பூசை செய்து பல மலர்களாலும் அருச்சித்துக் குண்டத்தினடுவே அக்கினிகாரியஞ் செய்து பாயசத்தாலும் பசுவின்நெய்யாலும் ஆயிரத்தெட்டாவது நூற்றெட்டாவது பஞ்சாக்ஷரஞ்செபித்து விதிப்படி ஆகுதி செய்துமுடித்து உமாமகேசுரரை உள்ளத்திலே யொடுக்கிக் கொண்டு பிரதிமைகளைத்

தண்டுல முதலானவைகளுடன் உயர்ந்த வேதியருக்குத் தானஞ் செய்து வேதந்தெளிந்த வேதியர்கள் யாவர்க்கும் அன்னதானஞ்செய்து பின்பு சுற்றத்தாருடனே போசனஞ்செய்து அதன்மேலே தன்னுடைய நாயகனை ஊசலிலே வைத்து ஆட்டி மகிழ்விக்கவேண்டும். இந்த விரத மாதந்தோறுஞ் செய்யவேண்டும். விதிதவறாது இந்த விரதஞ்செய்தால் உயர்ந்த பாக்கியங்களுண்டாகும். இவ்விதம் பதினொரு வருடஞ் சென்றால் பன்னிரண்டாம் வருடத்து மார்கழி மாதம் முன்போலவே விரதம் அநுட்டித்துப் பூச நக்ஷத்திரத்திலே உத்தியாபனஞ் செய்யவேண்டும்.

முன்னொரு காலத்தில் இந்திரத்துய்மினன் மைந்தனாகிய புண்ணியகீர்த்தி வம்மிசத்திலே தோன்றிய மகான்மா என்னும் பாண்டியன் தன் மனைவியுடனே பாவநாசத் தலத்திலே வந்து தாமிரபன்னி நதியிலே மூழ்கியெழுந்து முக்களா மூர்த்தியைத் தரிசனஞ் செய்து ஐம்புலன்களையும் ஒடுக்கிப் புத்திரனை விரும்பி நல்ல விரத தவங்களைச் செய்து கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் நாரத முனிவர் அங்கே யெழுந்தருளினர். அரசன் அவரை உபசரித்து வணங்கி நிற்ப, முனிவர் அரசன் கருத்தை யுணர்ந்து திருவாதிரை விரதமான்மியத்தை யெடுத்துக் கூறி இவ்விரதத்தை உன்னுடைய மனைவி அநுட்டித்தால் அநேகம் புத்திரப் பேறுண்டாமென்று சொல்லிவிட்டுத்

தமதிடத்துக்குச் சென்றார். அப்பால் அரசன் மனைவி திருவாதிரை விரதம் விதிப்படி பதினொரு வருடமிருந்தால் பன்னிரண்டாவது வருடத்திலே உத்தியாபனஞ் செய்துமுடித்து வயிராசலிங்கப் பெருமானை வணங்கலும் அப்பெருமான் எதிரெழுந்தருளி அநேகம் புத்திரரைப் பெறுக என்று வரங்கொடுக்க அவ்வரத்தை வாங்கிக்கொண்டு அரசனும் மனைவியும் தங்கள் பட்டணத்தையடைந்து பல புத்திரர்களைப் பெற்று மகிழ்ச்சியோடு வாழ்ந்திருந்தார்கள். இந்த விரதத்தின் மான்மியம் எம்மாற் பேசத்தக்கதோ? இனிமேல் முனிவர்களே! சோமவார விரதத்தின் மேன்மையை எடுத்துச் சொல்லுவோமென்று சூதமுனிவர் அருளிச் செய்தனர்.

---

33. சோமவார விரதச் சருக்கம்

கற்பநூலெடுத்துச் சொல்லும் விதிப்படி கார்த்திகைமாதத்து முதற் சோமவாரத்திலே நித்தியகன்ம முடித்துப் பூசாமண்டபம் அலங்கரித்துப் புண்ணியாவாகஞ் செய்தபின் கும்பத்திலே உமாமகேசுர பூசனை செய்து பின்பு கும்பத்துக்கு வடதிசையிலே ஓமகுண்டம் உண்டு பண்ணிக் கரும்புத்துண்டினாலுஞ் சருக்கரையினாலும் நெய்யினாலும் தேங்காய்க் கீற்றினாலும் தேனாலும் வாழைக்கனியினாலும் பாயசத்தாலும் எள்ளினாலும் வகைக்கு நூற்றெட்டு நூற்றெட்டு, பஞ்சாக்ஷர

மந்திரத்தால் ஓமங்கள் செய்து சிவபிரான் பூசைமுடித்து வேதியர்க்குப் பாலும் அன்னமுங் கொடுத்துத் தான் உபவாசியாயிருந்து இராத்திரி நான்கு சாமமும் பூசை செய்து மறுநாள் உதயத்தில நித்தியகன்ம முடித்துச் சிவபூசைசெய்து ஓமமும் அவ்வாறேசெய்த பின்பு தம் பதி பூசைசெய்து சத்தானங்களுஞ் சிவலிங்கதானமுஞ் செய்து குற்றமில்லாத பிராமணர்களுக்கு அன்னதானஞ் செய்து தக்ஷிணைகொடுத்துச் சுற்றத்தாரோடு பாரணஞ் செய்யவேண்டும். இவ்விதம் வாரந்தோறும இவ்விரதஞ் செய்து முடித்துச் சித்திரை மாசத்து முதற் சோம வாரத்திலே உத்தியாபனஞ் செய்ய வேண்டும். இவ்வித மன்றிச் சரீரமிருக்கு மளவு இநத விரததனை இம்முறை அநுட்டிக்கலாம். இந்த விரதத்தைக் கோசல தேசத் திலே சூடாமணி நகரத்திலே வசிக்கும் சிவதத்தனென் னும் பிராமணனுடைய புத்திரனாகிய மணிமானென்னும் பேரையுடையவன் குழந்தைப் பருவத்திலே விதிப்படி இந்தவிரதத்தை அநுட்டித்தான். இப்படி யநுட்டிக்குங் காலத்திலே உரோமசமுனிவர் அவ்விடத்துக்கு வந்தார். உடனே சிவதத்தனும் மணிமானும் வணங்கியுபசரித்துச் சுவாமி! இங்கெழுந்தருளியது யாதுகாரண மென்று தோத்திரஞ்செய்தலும் முனிவர் சொல்லுவார்:

உங்களில் மணிமானென்பவன் செய்யும் சோமவார விரதத்தின் மேன்மையைத் தேவருலகத்திலே விசாரித்து வந்தேன். இவ்விரதத்தினுண்மையை இந்தச்

சிறு பிராயத்திலே எவ்வாறு தெரிந்தாயென்று கேட்க, மணிமானென்னுங் குழந்தை சொல்லுவான்: முன் சென்மத்திலே பாண்டி நாட்டிலே இந்திரத் துய்மினனென்னும் பாண்டியராசனுக்குப் புத்திரனாகப் பிறந்து சுதன்மாவென்னும் பெயரை யடைந்திருந்தேன். அப்போது தத்தாத்திரய மாமுனிவர் வரவு தெரிந்து அவரை விதிப்படி பூசித்து வணங்கி நின்றேன். அம் முனிவரிந்த விரதத்தை எனக்குபதேசித்தருளினார். உடனே அம்முனிவரது தரிசனத்திலுஞ் சிவஞானம் பெற்றிருத்தலானும் தாமிரபன்னியிலே தீர்த்தமாடிய பலத்தினாலும் அங்குள்ள பாவநாசத்திலெழுந்தருளிய முக்களாமூர்த்தி திருவருள் பெற்றுத் திருக்கயிலாச மலையை யடைந்து பதினாயிரம் பிரமகற்பகாலஞ் சிவ சாரூபம் பெற்றிருந்தேன். முற்சென்மத்தின் அறிவுடனே முத்தியை யடையும்பொருட்டுப் பிராமண வருணத்திலே இங்கேவந்து பிறந்தேன். ஆதலாற் பழைய சென்ம வாசனைப் பலத்தால் இந்த விரததத்தை அநுட்டித்து வந்தேன் சுவாமி! உம்முடைய தரிசனமுங் கிடைக்கப் பெற்றேன்; மேலும் இனி மோக்ஷ வீட்டை எளிதி னடைவேனென்றான்.

உரோமச முனிவர் கேட்டுச் சந்தோஷித்துத் தம்முடைய தவப் பலத்திலே சிறிதுபாகம் அவனுக்குக் கொடுத்து நீ நினைத்ததையெல்லாங் கைகூடுமென்று ஒரு வரமுந்தந்து தமதாச்சிரமத்திற்குப் போயினர்.

மணிமானும் சோமவார விரதத்தை அநுட்டித்திருந்து சிலநாட் சென்று மோக்ஷத்தை யடைந்தான். இந்த விரதத்தை அநுட்டிப்பவர் எப்படிப்பட்ட பாதகராயினுஞ் சிவபதஞ் சேர்ந்திருப்பார்; ஆகலாலே இந்த விரதம் இயற்றுதற்குத் திரவிய சகாயமில்லாதவரா யிருந்தால் ஆகாரம் நித்திரை இவ்விரண்டையும் அன்றைக்காவது நீக்கிச் சிவபிரான் சந்நிதி நீங்காதிருந்து தரிசித்து மறுதினம் காலையிலே பாரணஞ் செய்தால் புத்தியும் முத்தியுஞ் சேருவார். சோமவார விரத மான்மியஞ் சொன்னோம்;இனிச் சுக்கிரவார விரதத்தின் மகிமையைச் சொல்லுவோமென்று சூதமுனிவர் மற்றை முனிவர்க்குக் கூறினர்.

---

34. சுக்கிரவார விரதச் சருக்கம்.

சுக்கிரவார விரதமானது பார்வதிக்கும் விநாயகருக்கும் இலக்குமிக்கும் உரியது. மார்கழி மாதத்து முதற் சுக்கிரவாரத்திலே நித்தியகன்ம முடித்துப் பின்பு அக்கினிகுண்டம் அமைத்து அதற்கு ஈசானத்திலே வேதிகையிட்டுத் தண்டுலம் பரப்பி அதன்மேல் வெள்ளை வஸ்திரம ஒன்று மடித்துவைத்து அதன்மேலே திரிபுரசுந்தரி சக்கரத்தை யமைத்துப் பஞ்சாக்ஷர மந்திரத்தை யுச்சரித்துப் பூசைசெய்து சக்கரவேதிகைக்குத் தென்றிசையிலே யொரு வேதிகை செய்து அதன்மேலே

நெல்லைப் பரப்பி வெள்ளிய நூல் சுற்றிய கும்பத்தைச் சிவந்த மலர்களாலே யலங்கரித்துத்தாபித்துப் பொன்னாற் செய்த பிரதிமையொன்றைக் கும்பத்தின் மேலே வைத்து, வேதவிதிப்படி பூசித்துத் தேன் வர்க்கஞ் சேர்ந்த பாயசத்தால் ஓமஞ்செய்து பார்வதியைப் பூசை செய்து முன் சொன்ன மந்திரத்தால் நூற்றெட்டாகுதி ஓமகுண்டத்திலே செய்து பார்வதிக்குக் கொடுத்துப் பூசையை முடித்துப் பின்பு பார்வதியைத் தன்னுள்ளத்திலே யொடுக்கிக்கொண்டு பிரதிமை வஸ்திரந் தானிய முதலியவைகளை நல்லொழுக்கமுள்ள வேதியருக்குத் தானஞ்செய்து கும்பத்தினீரைச் சிரத்திலே தெளித்துக் கொண்டு பிராமண போசனஞ் செய்வித்து, தானிச்சித்த காரியத்தை முடித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்துச் சுற்றத்தாரோடும் போசனஞ் செய்யவேண்டும்; இது தான் பார்வதியை உத்தேசித்துச் செய்யும் சுக்கிரவார விரதமாம்.

இந்தக் கிரமப்படியே விநாயகருக்கும் இலக்குமிக்கும் அவரவர் மந்திரங்களால் சுக்கிரவார விரதஞ் செய்து முடிக்கவேண்டும் இனி அவரவர்களுக்குச் செய்யும் ஓமாக்கினியின் திரவிய வகையைச் சொல்லுவோம். நெய்யும் தேங்காய்க் கீற்றும் திண்ணமாகிய பாயசமும், மோதகமும், கரும்பும், சர்க்கரையும் விநாயகருடைய ஓமாக்கினிக்குரிய பொருள்களாம். வில்வச்

சமித்தும் நெய்யும், பாயசமும் இலக்குமியினது ஓமாக்கினிக்கு உரிய பொருள்களாம். இந்த விரதத்தை முற்காலத்திலே பாண்டிய ராசாக்களது மனைவிமார் மூன்றுபேர் அநுட்டித்த கதையைச் சொல்லுவோம். மகான்மாவென்னும் பாண்டியன் புத்திரர் மூவர்களிலே சந்திராதவங்கிச னென்பவன் சவுராட்டிர தேசத்தை அரசாண்டு வந்தான். தீமானென்னு மைந்தன் பாஞ்சால தேசத்தை அரசாண்டு வந்தான். இராம னென்னு மைந்தன் கோசல தேசத்தை அரசாண்டு வந்தான்.

இம் மூன்றுபேரும் ஒரு காலத்திலே பகையரசர் களாலே தங்களுடைய நாடு நகரமுதலிய எல்லாமிழந்து மனைவி புத்திராதியர்களுடன் அன்னிய தேசம் புகுந்து தீர்த்த யாத்திரைசெய்து பலதேசமுஞ் சுற்றிக் கார்த் திகை மாதத்தின் முடிவிலே பாவநாசந தலத்தை வந்து சேர்ந்து தாமிரபன்னியிலே ஸ்நானஞ்செய்து முக்களா லிங்கப்பெருமானைத் தரிசனஞ்செய்து ஒரு சந்தனப் பூஞ்சோலையிலே இருக்கும்போது அவ்விடத்துக்குச் சானந்தியென்னும் மகாமுனிவர் வந்தார். உடனே அங் கிருந்த அரசர்கள் மூவருந் தங்கள் தங்கள் பத்தினிமா ருடனே எழுந்து வணங்கித் தோத்திரஞ் செய்து நின் றார்கள். அம் முனிவர் அவர்செய்யும் பூசனையை மகிழ்ந்து அவர்களடைந்த துன்பத்தை யறிந்து இரங்கி அரசர்களே! நீங்கள் துன்பத்தை விட்டுவிடுங்கள்.

முற்சனனததிலே நீங்கள் மூவரும் பிராமணராகப் பிறந்திருந்தீர்கள். உங்கள் பததினிமார்கள மூவரும் பிருகு ரிஷி வம்மிசத்திலே பிறந்திருந்து புண்ணிய வசத்தால் உங்களை நாயகராகப் படைத்துப் பெருவாழ்வினிருந்தார்கள். இந்தப் பெண்கள் மூவரும் பிதா வீட்டிலே யிருக்கும்போது கண்ணில்லாத ஒரு சந்நியாசி பிச்சைக்கு வந்தார். அவருக்குப் பிச்சை யிடாமலும் வணங்காமலும் செல்வச் செருக்கினாலே அவரை யிகழ்ந்தார்கள்.

உடனே அம்முனிவர் அளவில்லாத உங்கள் செல்வமெல்லாம் நீங்கித் துன்பமெய்தக் கடவீரென்று சபித்தார். பெண்கள் மூவரும் பயந்து நடுநடுஙகி முனிவரை வணங்கி யுபசரித்து எங்கள் குற்றத்தைப் போக்கித் திருவருள் புரிய வேண்டுமென்ற அளவிலே முனிவர் சந்தோஷித்து முன்போல நீங்கள் செல்வமெய்தக்கடவதென்று சொல்லிவிட்டுப் போயினர். ஆதலால் அரசர்களே! நீங்கள் மூவரும் உங்கள் பத்தினிமாரும் இந்தத் தாமிரபன்னி நதியிலே ஸ்நானஞ்செய்த பின்பு உங்கள் மனைவியர் மூவரும் விநாயகர், பார்வதி, இலக்குமி இந்த மூவர்களுக்குமுரிய சுக்கிரவார விரதத்தை அநுட்டிப்பாரானால், புத்தி முத்தியும் பொருந்தலாகுமென்று விரதம் அநுட்டிக்கும் முறையை அப்பெண்கள் மூவருக்குஞ் சொல்லித் தமதிடத்துக்குச் சென்றார். பின்பு அப்பெண்கள் மூவரும் மார்கழி மாததிலே சுக்கிரவார

விரதத்தை விநாயகர், பார்வதி, இலக்குமி யென்னு மூவரையும் பிரார்த்தித்து அநுட்டிக்கவே விநாயகர் முதலிய மூவருமெதிரெழுந்தருளி அவரவர் வேண்டிய வரங்களைக் கொடுத்துச் சென்றனர். அதன்மேல் அரசர்கள் மூவரும் மனைவியரும் புத்திரரும் முக்களாலிங்கரைப் பூசித்துத திருவருள்பெற்று வரும்போது தங்களுக்கு ஞாதியர்களாகிய பாண்டியர்கள் உபசரித்துக் கொடுக்கப் பட்ட நால்வகைச் சேனைகளுடன் தங்கள் தங்கள் தேசத் திற்சென்று போர்செய்து பகைவரை வென்று முன் போலத் தங்களுக்குரிய நாட்டைத் தாங்கள் அரசாட்சி செய்திருந்து சிவபிரான் திருவருளால் முடிவிலே பர லோகஞ் சேர்ந்தார்கள். ஆதலால் சுக்கிரவார விரதத்தை இம்முறை விதிப்படி அநுட்டித்து வருவார்களாயின், பாவங்களையெல்லாம் போக்கிச் சிவபிரான் திருவடிநீழலை அடைவார்கள்.

---

35. புராண மகிமைச் சருக்கம்.

வேதங்களையுணர்ந்த முனிவர்களே! இந்தப்பாவ நாசத்தலத்தின் மான்மியம், பதினெண்புராணத்து ளொன்றுகிய பிரமாண்டபுராணத்தில்உத்தரபாகத்திலே க்ஷேத்திரவைபவ காண்டத்திலே சிவபிரான் திருவாக்கினு லருளிச்செய்யப்பட்டது. இந்தமான்மிய முள்ள புராணத்தைப் படிப்பவர்களும், கேட்பவர்களும்

விரும்பிய எல்லாப்போகங்களையும் பெறுவார். பாவமாகிய கடலையும் நீந்திச் சிவபிரான் திருவடியாகிய கரையை யடைவார்கள்; அன்றியும் வேதத்திலே கூறியபதினெட்டு வித யாகத்தைச்செய்த பலன்களையுஞ் சிவபூஜை செய்த பலனையும் பெறுவார்கள். இந்தப்புராணம் படிக்குமிடத்தில் நடந்த கதையொன்றுளது. அதனைச்சொல்லுகிறேன் கேளுங்கள் முனிவர்களே! யென்று சூதமுனிவர்சொல்லுவார்: சிந்துமாநதிக்கரையிலே ஒரு சோலை சூழ்ந்த அரதனநகரமென்னும் ஒரு ஊரிலே வித்தியாதரன் என்னும் ஒரு பிராமணனிருந்தான்; அவன் அழகிலே மன்மதனையொப்பானவன். அதனாலே அவ்வூரிலுள்ள பெண்களெல்லாம் அவனை மனதிலே நினைப்பாராயினர்.

நினைப்பின் வழியே அப்பெண்கள் பெறும் பிள்ளைகளெல்லாம் அப்பிராமணனைப் போலவேயிருந்தன. அதுகண்டு புருடர்களெல்லாம் சந்தேகித்து அப்பெண்களையும் பிள்ளைகளையும் வெறுத்துவிட்டார்கள். பின்பு வித்தியாதரனாகிய அந்தப்பிராமணனையும் ஊரைவிட்டு அப்பாலே துரத்தினார்கள். அவனும் அப்பெண்களிற் சிலர் தன்னைத்தொடர்ந்துவர வெளிப்பட்டு வெகுதூரஞ் சென்றலைந்துதிரிந்து காசிக்ஷேத்திரத்தை யடைந்து சிலநாளிருந்து அங்குள்ளார் தன்னை நிந்திக்க அப்பாற் சென்று புட்கலநாட்டிலுள்ள அச்சுதநகரத்தையடைந்து

அங்குள்ள பிராமணர்கள் (பகீரதனுக்குத்தண்டதரன் சொல்லிய கதைபடித்துக் கொண்டிருக்குமிடஞ்சென்று) பாவங்கள் பலவகையாகச் செய்யப்பட்டவர்களெய்துந் துன்பத்தை யெடுத்துப் பிரசங்கஞ் செய்யக்கேட்டுத் தன்னுடைய உயிரை விட்டுவிடும் பொருட்டு உண்ணு தற்காக எட்டிவிரையைத்தேடி ஒரு வனத்திலே போம் போது, அவ்வனத்திலே யிருக்குஞ் சானந்திமுனிவர் பாவநாசத்திலே விராட்டு கேட்பச் சிவபிரான அருளிச் செய்த மான்மியமுள்ள பாவநாசத்தலத்தைச் சேர்ந்தால் எவ்வகைப்பட்ட பாவமும் நீங்குமென்று பாவநாசத்தல புராணம் படிக்கக்கேட்டுப் பின்பு பாவநாசத்தலத்திலே வந்து வேத தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து, ஆலயத்தை யும் பொதிகை மலையினருவியையும் சந்தனப்பூஞ்சோலை யையுங்கண்டு முக்களாலிங்கத்தைத் தரிசித்துப் பேரா னந்த மடைந்து ஆனந்தக்கண்ணீர் பொழியத் தோத்தி ரஞ்செய்தான்.

உடனே சிவபிரான் கருணைகூர்ந்து இடபாரூடரா யெழுந்தருளி வந்து நின்று வித்தியாதரனைப் பார்த்து நீயும் உன்னோடு நின்ற பெண்களும் பிள்ளைகளும் நம் முடைய பதத்திலே வந்து சேருங்களென்று கட்டளை யிட்டு இலிங்கத்துள்ளே மறைந்திருந்தனர். உடனே விமானத்திலேறி வித்தியாதரன் பெண்கள் பிள்ளைகளு டன் சென்று திருக்கயிலாச மலையைச் சேர்ந்தான்.

இவன் பதவியிதுவானால் கிரமமான நியமமுள்ளவர் இப் புராணங்கேட்பாரானால் அவர் பெறும் பலனை யாராற் சொல்லக்கூடுமென்று சூதமுனிவர் அருளிச்செய்ய மற்றைமுனிவரர் பலருங்கேள்வியுற்று ஆனந்தவாரி யிலே மூழ்கிச் சூதமுனிவரை வணங்கி அவரவரா லியன்ற தக்ஷணை கொடுத்துத் தோத்திரஞ்செய்து மகிழ்ச்சி யடைந்தார்கள்.

முற்றிற்று.



ஹில்லாஸ் பிரஸ் திருநெல்வேலி—4-'41.